# CURRENT AFFAIRS

**பிப்ரவரி 2018**

# உலக செய்திகள்

**பிப்ரவரி – 1**

- உலகிலேயே அதிக அளவு தனிநபர் வருமான வரி விதிக்கும் நாடுகள் பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது. இத்தாலி மற்றும் ஜெர்மனி 2, 3வது இடத்தில் உள்ளது
- உலகில் மிக அதிகமாக கருப்பு பணம் குவியும் நாடுகள் பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடத்தில் உள்ளது
- இந்தோனேசியாவில் உள்ள அ.்.சே என்ற பகுதிக்கு செல்லும் முஸ்லீம் விமான பணிப்பெண்கள் கட்டாயமாக ஹிஜாப் அணிய வேண்டும் என்ற புதிய சட்டம் அமலுக்கு வந்துள்ளது
- சீனாவில் இன்டர்நெட் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 77.2 கோடியாக உயர்ந்துள்ளது
- தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் விசா வழங்கப்படும் என்ற புதிய விசா நடைமுறை திட்டங்களை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்
- இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே மீண்டும் 3 ஆண்டுகளுக்கு ரெயில் போக்குவரத்து நடைபெற ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது

**பிப்ரவரி – 2**

- பாலின வேறுபாடுகள் இல்லாத வகையில் தேசிய கீதத்தில் உள்ள ஒரு சில வார்த்தைகளை மாற்ற கனடா அரசு முடிவு செய்துள்ளது
- ஸ்பெயின் நாட்டின் மிக உயரிய விருதான கோல்டன் ஃபிளீட்ஸ் விருது அந்நாட்டு மன்னர் ஆறாம் ஃபிலிப்-இன் மகள் லியோவுக்கு வழங்கப்பட்டுள்ளது
- சீனாவில் உள்ள ஷாங்க்ஷி மகாண அரசு, திருமணங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் அவற்றை ஊக்குவிக்கும் விதத்தில் திருமண செலவுக்கு ஆண்டுக்கு 15 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க முடிவு செய்துள்ளது
- தாய்லாந்தில் சுற்றுலாப் பயணிகளால் ஈர்க்கப்படுகிற 24 கடற்கரை பகுதியில் புகைப் பிடிக்கவும், குப்பைகளை போடவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது

## பிப்ரவரி – 3

- உலகிலேயே மிக நீண்ட சாகச கம்பிப்பாதை – ஐக்கிய அரபு அமீரகம்(ராஸ் அல் கைமா மாகாணம் - ஜெபல், ஜெய்ஸ் மலைகளுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ளது)

- ஆ.ஃப்கான் மலைப்பகுதியில் ராணுவ தளம் அமைக்க சீனா முடிவு செய்துள்ளது. இதன் முதல் கட்டமாக ஆ.ஃப்கான் அரசுக்கு ரூ.450 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது

- 2016ம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து, இந்திய தொழிலாளர்கள் மூலம் 6 ஆயிரத்து 300 கோடி டாலர் இந்தியாவில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 135 நாடுகளில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 1200 கோடி டாலருடன் முதலிடத்தில் உள்ளது

- மியான்மரில் ரோஹிங்கயா இனத்தாருக்கு எதிராக வன்முறைகள் நடைபெறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் நேரில் ஆய்வு செய்ய அந்நாடு அனுமதி மறுத்துள்ளது

- பிரிட்டன் மற்றும் சீனா இடையே உள்ள வணிக உறவை மேம்படுத்தும் விதத்தில் ரூ.930 கோடி பவுண்ட் மதிப்பிலான பல்வேறு உடன்படிக்கைகள் கையெழுத்தாகியுள்ளது

## பிப்ரவரி – 4

- உலகிலேயே மிகச் சிறிய ராக்கெட் மூலம் 3கிலோ எடையுள்ள மிகச் சிறிய செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தி ஜப்பான் சாதனை படைத்துள்ளது.

- அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷியா, ஜப்பான், கனடா, உள்ளிட்ட 17 ஐரோப்பிய நாடுகளின் விண்வெளிக்கழகமும் இணைந்து 150 பில்லியன் டாலர் செலவில் பூமிக்கு மேல் விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை உருவாக்கி வருகிறது

- உலகின் முதல் மின்காந்த இரயில் துப்பாக்கியை (ஏவுகணையை செலுத்த) பொருத்திய போர்க்கப்பலை சீனா உருவாக்கியுள்ளது.

- ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சாண்டர் மிசுர்கின், ஆன்டன் ஸ்காப்லெரோவ் ஆகிய 2 வீரர்கள் விண்வெளியில் 8 மணி 13 நிமிடம் நடந்து சாதனை படைத்துள்ளனர்.

We Shine Academy

- ஜப்பானில் உள்ள ஒசாகா பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஹிரோஷி இசிகுரோ (ரோபாடிக் ஆய்வக இயக்குனர்) டிவியில் தொகுப்பாளர் வேலை செய்யும் விதமாக ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளார். இந்த ரோபோவை ஏப்ரல் மாதத்தில் இருந்து டிவியில் தொகுப்பாளராக பணியாற்ற விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

- உலகிலேயே ஹாங்காங்கில்தான் மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் 84 ஆண்டுகளாக உள்ளது என ஐ.நா. சபையின் மனித அபிவிருத்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- இந்தியாவுடனான நட்புறவு நீடிப்பதாகவும், அதிபர் டிரம்ப் அந்நாட்டுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற விரும்புகிறார் என்றும் ஐ.நா-வுக்கான அமெரிக்கத் தூதர் ''நிக்கி ஹேலி'' (இந்திய வம்சாவளி) தெரிவித்துள்ளார்.

- இந்தியாவுடனான நட்புறவை மதிப்பதாகவும், அதேசமயம் சீனாவின் இறையாண்மை உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம் எனவும் ''யாங் ஸி'' (சீன வெளியுறவுத்துறை அமைச்சர்) தெரிவித்துள்ளார்.

**பிப்ரவரி – 5**

- அரசு நிர்வாகத்தின் வசதிக்காக முதன் முறையாக ஆங்கிலம்-தமிழ் சொல்வளக் கையேட்டை சிங்கப்பூர் வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரில் 4வது அலுவலக மொழியாக தமிழ் உள்ளது.

- இலங்கையின் 70வது சுதந்திர தின விழா (பிப்ரவரி 04) நேற்று நடைபெற்றது.

- உலகின் மிகவும் தொன்மையான மாயன் நகரத்தை கௌதமாலா நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- உலகின் மிக ஆபத்தான இடங்களில், மிக அதிக வெப்பநிலை உடைய கலிபோர்னியா(அமெரிக்கா) நகரில் உள்ள பள்ளத்தாக்கு முதலிடத்தில் உள்ளது.

- கோடீஸ்வரர்கள் நாட்டை விட்டு வெளியேறிய நாடுகள் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. இந்தியா 2வது இடத்தில் உள்ளது. 2017ம் ஆண்டில் 7 ஆயிரம் கோடீஸ்வரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

- சுரங்கத்தில் இருந்து கடற்கரையை இணைக்கும் ரெயில் பாதை அமைப்பதற்கான அதானி குழுமத்தின் திட்டத்திற்கு தேவையான நிதியுதவிக்கு ஆஸ்திரேலிய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

- சைப்ரஸ் அதிபராக நிகோஸ் அனஸ்டசியடெஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

- சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் இளம் சமையல் கலைஞர் பட்டம் மலேசியாவை சேர்ந்த லாய் ஜியாயிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவை சேர்ந்த சூர்ய சேகர ராய் சவுத்ரி 2வது இடத்தில் உள்ளார்.

### பிப்ரவரி – 6

- 2017ம் ஆண்டின் உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்கள் பட்டியலில் துபாய் விமான நிலையம் முதலிடம் பிடித்துள்ளது.

- தனியார் துறையைச் சேர்ந்த ஸ்பேஸ் எக்ஸ் (அமெரிக்கா) என்ற நிறுவனம் உலகிலேயே மிகப் பெரிய சக்தி வாய்ந்த ராக்கெட்டான “ஃபால்கன் ஹெவி”யை விண்ணில் ஏவியுள்ளது.

- ஐரோப்பாவைச் சேர்ந்த “கேப்ஜெமினி” நிறுவனம் டிஜிட்டல் கன்சல்டிங் பிரிவில் சிறந்து விளங்கும் “லிக்விட்ஹப்” (வட அமெரிக்கா) நிறுவனத்தை வாங்கியுள்ளது.

- நடுவானில் இடைமறித்துத் தாக்கும் ஏவுகணை சோதனையைச் சீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

### பிப்ரவரி – 7

- ஆசிய அளவில் சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் முதலிடத்திலும், சீனாவின் சிங்குவா பல்கலைக்கழகம் 2வது இடத்திலும் உள்ளது. சென்னை ஐஐடி 103வது இடத்திலும், மும்பை ஐஐடி 44வது இடத்திலும், இந்திய அறிவியல் கல்வி நிறுவனம்(பெங்களுரு) 29வது இடத்திலும் உள்ளது. பனராஸ் பல்கலைக்கழகம் 194வது இடத்தை பிடித்து முதன்முறையாக இந்த தரவரிசையில் நுழைந்துள்ளது

- சவுதி அரேபியாவில் கார், பைக், கட்டுமானம் உள்ளிட்ட 12 துறைகளில் வெளிநாட்டினர் பணிப்புரிய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது

- பிரத்தானியாவில் விசா பெறுவதற்கு விண்ணப்பம் செய்யவதற்கான கட்டணத்தை இருமடங்காக (200 பவுண்டிலிருந்து 400 பவுண்ட் ஆக) உயர்த்த பிரத்தானியா அரசு முடிவு செய்துள்ளது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

- உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட தீவு – சாண்டா குரூஸ் டெல் என்னும் கரீபியன் தீவு

- டென்மார்க்கில் உள்ள, உலகின் மிகப் பழமையான பூங்கா(டிவோலி கார்டன்) அமைக்கப்பட்டு 175 ஆண்டுகள் நிறைவடைந்தது

- பாகிஸ்தானில் முதன் முறையாக மைனாரிட்டி ஆக உள்ள இந்துப்பெண் ஒருவர் செனட் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பாகிஸ்தானில் முதல் இந்து பெண் செனட் உறுப்பினராவார்

- பாதுகாப்பு விவகாரங்கள் தவிர்த்து பாகிஸ்தானுக்கு அளிக்கப்படும் பிறவகை பொருளாதார உதவிகளை நிறுத்துவதற்கான மசோதா, அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

- இங்கிலாந்தில் உள்ள சர்வதேச கல்லூரியில் ஆயிரமாவது மாணவராக சேர்ந்த இந்திய மாணவருக்கு 90 ஆயிரம் ரூபாய் கல்வித் தொகை வழங்கப்பட்டுள்ளது

- வங்கதேசத்தில் தஞ்சம் புகுந்து உள்ள ரோஹிங்கயா முஸ்லீம் அகதிகளுக்கு, சுவிட்சர்லாந்து அதிபர் அலாயின் பெர்செட், 12.9 மில்லியன் டாலர்(சுமார் ரூ.83 கோடியே 85 லட்சம்) நிதி உதவி வழங்கப்படும் என அறிவித்து உள்ளார்

**பிப்ரவரி – 8**

- வங்கதேச அதிபராக அப்துல் ஹ மீத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்

- சீனாவில், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஸ்கேனருடன் கூடிய உயர் தொழில்நுட்பக் கண்ணாடியை போலீசார் பயன்படுத்தி வருகின்றனர்

- வட கொரியாவுக்கு எதிராக இதுவரை இல்லாத அளவுக்கு கடுமையான பொருளாதாரத் தடை விதிக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது

- எறும்புகளின் நோய் எதிப்பு சக்தியை மனிதர்களுக்கு பயன்படுத்த முடியும் என்று அமெரிக்காவின் கரோலினா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்

**பிப்ரவரி – 9**

- உலகில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் நாடுகள் பட்டியலில் தென் கொரியா, ஸ்வீடன், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 1, 2, 3 வது இடத்தில் உள்ளது. அமெரிக்கா 11வது இடத்தில் உள்ளது

- கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரத்தானியா ஆகிய நாடுகள் உள்ளடங்கிய பன்னாட்டு மக்கள் இயக்கம், தடையற்ற போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் கொள்கை போன்றவற்றை அனுமதிக்கும் வகையில் ஐரோப்பிய யூனியனைப் போன்று மற்றொரு அமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளது

- அமெரிக்காவின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் ஹெச்1பி விசா பெறுவதில் 15 நிறுவனங்கள் மீது தடை(சம்பளம் மற்றும் வேலை நேரத்தை மீறிய காரணத்தினால்) விதித்துள்ளது

- உலக தமிழ் பெண்கள் மாநாடு மார்ச் 8ம் தேதி மலேசியாவில் நடைபெறவுள்ளது

- மாலத்தீவு வெளியிட்டுள்ள நட்பு நாடுகள் பட்டியலில் இந்தியா பெயர் இடம் பெறவில்லை.

- பறவை காய்ச்சல் பாதிப்புள்ளதால், இந்தியாவிலிருந்து கோழி முட்டை மற்றும் கோழிக்குஞ்சுகளை இறக்குமதி செய்ய சவுதி அரேபிய அரசு தடை விதித்துள்ளது

- இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சகம், ஜோர்டானுக்கான புதிய தூதராக 'அமிர் வெய்ஸ்ப்ராட்டை' நியமித்துள்ளது

- மல்யுத்த வீரர் 'ஜான் ஸீனா' குழந்தைகளுக்காக 'எல்போ கிரீஸ்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இந்த புத்தகம் அக்டோபர் 9ம் தேதி வெளிவரவுள்ளது

**பிப்ரவரி – 10**

- ரேடாரால் கூட கண்டுபிடிக்க முடியாத ஜே-20 என்ற அதிநவீன விமானத்தை சீனா தனது இராணுவத்தில் இணைத்துள்ளது

- அமெரிக்காவில் வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பு துணைச் செயலாளராக உள்ள ராஜ் ஷா(இந்திய வம்சாவளி) முதன் முறையாக அமெரிக்க அதிபரின் அறிவிப்பை செய்தியாளர்களிடம் பகிர்ந்துள்ளார்

- அமெரிக்க செனட் அவையில் 'செலவுக்கு நிதி ஒதுக்கீடு மசோதா' ஜனவரி 20ம் தேதி தோல்வி அடைந்ததால் அரசு நிர்வாகம் 3 நாட்கள் முடங்கியது. அரசு நிர்வாக முடக்கத்தை தவிர்க்க அமெரிக்காவில் 2 ஆண்டு பட்ஜெட்டை நிறைவேற்ற டிரம்ப் அரசு முடிவு செய்துள்ளது

- நாசாவின் நியூ ஹோரிசான் விண்கலம், 612 கோடி கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்து பூமியை படம் எடுத்து அனுப்பியுள்ளது

- முதல் முறையாக ஆய்வகத்தில் மனித கருமுட்டையை உருவாக்கி இங்கிலாந்திலுள்ள எடின்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சாதனைப் படைத்துள்ளனர்

**பிப்ரவரி – 11**

- உலகில் முதல் முறையாக பயணிகளுடன் பறக்கும் மெகா டிரோன் சோதனையை சீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

- உலகிலேயே மிக உயரமாக கண்ணாடி தொங்கு பாலத்தை (தென் மேற்கு சீனாவின் பெடாய் மலை – 6,500 அடி உயரம்) அமைத்து சீனா சாதனை படைத்துள்ளது.

- அரபு நாடுகளுக்கு அடுத்தபடியாக சர்வதேச அளவில் முதல் நாடாக இந்தியா, பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

- 2011 முதல் 2016ம் ஆண்டு வரை ஆஸ்திரேலியாவில் இந்துக்களின் எண்ணிக்கை 60 சதவீதம் அதிகரித்து 4,40,300பேர் உள்ளதாக அந்நாட்டு புள்ளிவிபர கழகம் தெரிவித்துள்ளது.

- அபுதாபியில் முதல் முறையாக இந்துக் கோவில் கட்டுவதற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியுள்ளார்.

- அமெரிக்க அரசின் துணை அட்டார்னி ஜெனரல் ரிச்செல் பிராண்ட், தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

**பிப்ரவரி – 12**

- உலக அளவில் பணக்கார நகரங்களின் பட்டியலில் நியூயார்க் நகரம் முதலிடத்தில் உள்ளது. லண்டன் மற்றும் டோக்கியோ 2, 3வது இடத்தில் உள்ளது. மும்பை(இந்தியா) 12வது இடத்தில் உள்ளது

- இந்தியா – அபுதாபி இடையே கையெழுத்தான ஒப்பந்தத்தை அடுத்து, அபுதாபியில், இந்தியாவின் முதல் முதலீடு பெட்ரோலியத் துறை ஆகும்.

- துபாயில் உலகின் மிக உயரமான நட்சத்திர ஹோட்டல் (கெவோரா) திறக்கப்பட்டுள்ளது.

- இத்தாலியில் பாரம்பரிய ஆரஞ்சு திருவிழா கொண்டாடப்பட்டது

**பிப்ரவரி – 13**

- அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒன்றரை லட்சம் கோடி டாலர் மதிப்பீட்டிலான மிகப்பெரிய அமெரிக்க உள்கட்டமைப்புத் திட்டத்தை வெளியிட்டுள்ளார். இது அமெரிக்க வரலாற்றிலேயே மிக விரிவான உள்கட்டமைப்பு மசோதாவாகும்

- இந்தியா மற்றும் ஓமன் இடையே இராணுவம், சுகாதாரம், சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில், ஒப்பந்தம் கையெழுத்தானது

- பிப்ரவரி 13 – உலக ரேடியோ தினம்

- கனடா நாட்டின் பிரதமர் 'ஜஸ்டின் ட்ரூடோ', அரசு முறை பயணமாக பிப்ரவரி 17ம் தேதி இந்தியாவுக்கு வர உள்ளார்.

- கனடா மற்றும் நெதர்லாந்து இணைந்து The known Traveler Digital Identity என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் படி பயணிகள் இனி நீண்ட நேரம் கியூவில் நிற்க வேண்டியதில்லை

- பாலஸ்தீனம் அருகே ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட மேற்குக் கரையில் யூதக்குடியிருப்புகளை விரிவாக்கம் செய்வது தொடர்பான பிரச்சனை குறித்து அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த இஸ்ரேல் முடிவு செய்துள்ளது

**பிப்ரவரி – 14**

- தென் ஆப்பிரிக்காவில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட குடிநீர் வறட்சியை தேசியப் பேரிடராக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது

- சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நிதி வழங்குவதை 2025ம் ஆண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் திட்டமிட்டு உள்ளார்

- பூமிக்கு மேல் சுமார் 400 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள சர்வதேச விண்வெளி ஆய்வகத்தை தனியார்மயமாக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது

- அமெரிக்கா உளவு பிரிவு சைபர் தாக்குதலில் ஈடுபடும் நாடுகள் பட்டியலை வெளியிட்டது. இதில் ரஷ்யா, சீனா, வடகொரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்றுள்ளது

- சர்வதேச ரேடியோ கண்காட்சி புவனேஷ்வரில்(ஒடிஸா) தொடங்கியது

- அமெரிக்க பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் நிபந்தனைகளுடன் பாகிஸ்தானுக்கு ரூ.2200 கோடி நிதி உதவி வழங்க அதிபர் டொனால்டு டிரம்ப் பரிந்துரை செய்துள்ளார்

**பிப்ரவரி – 15**

- பிட்காயினை பயன்படுத்துபவர்களுக்கு 9 ஆயிரம் டாலர்கள் வரை அபராதம் விதிக்கப்படும் என வியட்நாம் அரசு அறிவித்துள்ளது

- தீவிரவாதத்திற்கு எதிராக போராடிய ஈராக் மக்களுக்கு, இந்தியா சார்பில் 20 மில்லியன் டாலர் நிதி மற்றும் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும் என இந்திய வெளியுறவுத் துறை இணை மந்திரி தெரிவித்துள்ளார்

- நேபாள நாட்டின் பிரதமராக ‘சர்மா ஒலி’ தேர்வு செய்யப்பட்டுள்ளார்

- தென் ஆப்பிரிக்காவின் அதிபர் ‘ஜேக்கப் ஜுமா’ இன்று தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்

- சீனா, அமெரிக்க இராணுவத்தின் ‘எப்-22 ராப்டார்’ என்ற போர் விமானத்தை எதிர்கொள்ளும் வகையில் ‘ஜே-20’ என்ற அதிநவீன போர் விமானத்தை தனது இராணுவப் படையில் சேர்த்துள்ளது

- அரசு முறை பயணமாக ஈரான் அதிபர் ‘ஹசன் ரௌஹானி’ நாளை இந்தியா வரவிருக்கிறார்

- ஜெர்மன் நாட்டில் மாசுபாட்டை குறைக்கும் வகையிலும், பொது போக்குவரத்தை அதிகரிக்கும் வகையிலும் இலவச பேருந்து பயணம் என்ற திட்டத்தை ஜெர்மன் அரசு அறிமுகப்படுத்தவுள்ளது

## பிப்ரவரி – 16

- உலகில் பாதுகாப்புக்கு அதிகம் செலவு செய்யும் நாடுகள்(2017) பட்டியலில் அமெரிக்கா(602.8 பில்லியன் டாலர்) முதலிடத்தில் உள்ளது. சீனா(150.5 பில்லியன் அமெரிக்க டாலர்) 2வது இடத்தில் உள்ளது. இந்தியா(52.5 பில்லியன் டாலர்) 5வது இடத்தில் உள்ளது

- அமெரிக்காவில் நிரந்தரமாக வசிப்பதற்கு வகை செய்யும் 'கிரீன் கார்டு'களை விண்ணப்பதாரரின் தாய்நாடு அடிப்படையில் இல்லாமல் அவரது தகுதிகளின் அடிப்படையில் வழங்குவதற்கு வகை செய்யும் சட்ட மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

- தென் ஆப்பிரிக்காவின் புதிய அதிபராக 'சிரில் ராமபோஸா' தேர்வு செய்யப்பட்டுள்ளார்

## பிப்ரவரி – 17

- 'ஷாட்ஓவர் கே1 கேமரா சிஸ்டம்' தயாரித்த இந்தியாவைச் சேர்ந்த 'விகாஸ் சதாயீ' என்பவருக்கு 'சயீன்டி.'.பிக் அண்ட் டெக்னிகல் ஆஸ்கர் விருது 2018' அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸின் பெவர்லி ஹில்ஸ் நகரில் வழங்கப்பட்டுள்ளது

- சுவிட்சர்லாந்தில் பயண சீட்டுகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே சலுகை விலை பயணச்சீட்டுகள் பயன்பாட்டை ஒழிக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது

- கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் பிரதமர் 'ஜலிமரியாம் தேசாலென்' தன் பதவியை ராஜினாமா செய்துள்ளார்

- சூரிய மண்டலத்தில் 100 புதிய கிரகங்களை 'கெப்லர்' விண்கலம் மூலம் நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்

- சுவிஸ் உளவு துறையின் பட்ஜெட் கடந்த ஆண்டை விட 4 சதவீதம் அதிகரித்து 75.6 மில்லியன் சுவிஸ் பிராங்குகளாக உயர்த்தப்பட்டுள்ளது

- 113 தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை சட்டத்துறை அமைச்சகம் உத்தரவிட்டிருந்த நிலையில் அந்நாட்டின் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 109 மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டனர்

## பிப்ரவரி – 18

- அமெரிக்காவின் பில்கேட்ஸ் அறக்கட்டளை வழங்கும், கல்வி உதவித்தாகையை பெற்று, கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் படிக்க, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள்(காம்யா வரகூர், மோனிகா குல்லார், நீல் தவே, அயன் மண்டல், பிரணாய் நாதெல்லா, வைத்தீஷ் வேல் அழகன்) தேர்வாகியுள்ளனர்

- அமெரிக்கா, தாய்லாந்து இணைந்து நடத்தும் வருடாந்திர இராணுவப் பயிற்சியில்(கோப்ரா கோல்டு) பிற நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்களும் பங்குபெற்றுள்ளனர். இதனால் இந்த பயிற்சி தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய இராணுவபயிற்சியாக கருதப்பட்டுள்ளது

- விண்வெளியில் காணப்படும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்றுவதற்கு ரோபோ ஒன்றினை நாசா நிறுவனம் அனுப்பி வைத்திருந்தது. தற்போது அந்த ரோபோ செயல் இழந்து வருவதால் அதை பணி நீக்கம் செய்ய நாசா தீர்மானித்துள்ளது

- பிரான்ஸில், கால்களால் பெடல் செய்யும் ஏர்பலூன் எனப்படும் இலகு ரக விமானம் ஒன்று தயாரித்தும், நீண்ட தூரம் அதனை இயக்கியும் 'ஸ்டீபன் ரவ்ஸன்' என்பவர் சாதனை படைத்துள்ளார்

- ஈரான் நாட்டின் சபஹார் துறைமுகத்தை இனி இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம் என ஈரான் அதிபர் 'ஹசன் ரூஹானி' தெரிவித்துள்ளார்

- திபெத்தில், யுனெஸ்கோ அமைப்பால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட 1300 ஆண்டுகள் பழைமை வாய்த்த 'ஜோகாங்' என்ற புத்த மடாலயம் தீப்பற்றி எரிந்தது

## பிப்ரவரி – 19

- ஸ்காட்லாந்து யார்டு போலீசின் பயங்கரவாத தடுப்பு பிரிவு தலைவராக மூத்த போலீஸ் அதிகாரி 'நீல் பாசு'(இந்திய வம்சாவளி) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

- சவுதி அரேபியாவில் பெண்கள் சுயமாக தொழில் தொடங்க கணவரின் அனுமதி தேவையில்லை என அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறை அமைச்சகம் அறிவித்துள்ளது

- அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நிறுவனத்தின் சார்பில் இந்தியாவின் சில பகுதிகளில் (மும்பை, கொல்கத்தா, புனே மற்றும் குரு கிராமம்) சொகுசு குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன

- 'பா.ஃ.ப்டா பிரிட்டன் திரைப்பட விருதுகள்' லண்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது. 'த்ரி பில் போர்ட்ஸ்' என்ற திரைப்படம், சிறந்த திரைப்படத்திற்கான விருது உள்பட 5 விருதுகளை வென்றுள்ளது

**பிப்ரவரி – 20**

- சிங்கப்பூர் அரசு பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்தது. இதில் அரசுக்கு 7.6 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் கொண்ட உபரி பட்ஜெட்(செலவுகளை விட அதிக வருவாய்) கிடைத்துள்ளது. இதனை அந்நாட்டு மக்களுக்கு சிறப்பு போனஸாக வழங்க சிங்கப்பூர் அரசு முடிவு செய்துள்ளது

- பாகிஸ்தான் அரசு சீன மொழியான 'மாண்டரின் மொழியை' ஆட்சி மொழியாக (அதிகாரப்பூர்வமாக) அறிவித்துள்ளது

- ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பகுதிகளை சேர்ந்த 68 நாடுகளை, சாலைகள், துறைமுகங்கள், இரயில், விமானங்கள், சர்வதேச மின் பாதை, பைப்லைன்கள் மூலம் இணைப்பதற்காக சீனா அரசு 'ஒரே மண்டலம், ஒரே பாதை' என்ற புதிய திட்டத்தை அமல்படுத்தியுள்ளது

- அமெரிக்காவில் அறிவியல், கணிதம், தொழில்நுட்பம், பொறியியல் ஆராய்ச்சிகளுக்கு வழங்கப்படும் உயரிய விருதான 'ஸ்டெம்' விருதுக்கு இந்திய வம்சாவளியை சேர்ந்த அருண் ஜெ.சன்யால்(கல்லீரல் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க எளிதான பயிற்சி வகுப்புகள்), பார்த்திக் நாயுடு(மரப்பணுவில் புற்றுநோய் வருவதற்கான கூறு உள்ளதா என்பதை கண்டறிய முப்பரிமாண மென்பொருள்) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- சுமத்ரா தீவில்(இந்தோனேசியா) உள்ள 'சினாபங் எரிமலை' வெடிக்கும் நிலையில் உள்ளது

**பிப்ரவரி – 21**

- உலக சுகாதார அமைப்பு, உலகின் மிகவும் மாசுப்பட்ட நகரங்கள் பட்டியலை வெளியிட்டது இதில் ஷபோல்(ஈரான்) நகரம் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவின் குவாலியர் மற்றும் அலகாபாத் நகரங்கள் 2, 3வது இடத்தில் உள்ளது. புது டெல்லி 11வது இடத்தில் உள்ளது.

- உலகில் பிறந்த குழந்தைகளுக்கு ஆபத்து நிறைந்த நாடுகள் பட்டியலை யூனிசெப் அறிவித்துள்ளது. இதில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. இந்தியா 12வது இடத்தில் உள்ளது.

- 99 சதவீதம் சூரிய ஒளியை உறிஞ்சும் தன்மை கொண்ட உலகின் மிக இருட்டான கட்டிடம் தென் கொரியாவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- தொழில் தொடங்குவதற்கு, சீனாவை விட இந்தியாவே உகந்த நாடாக உள்ளது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மகன் தெரிவித்துள்ளார். இந்தியாவில் 'டிரம்ப் டவர்ஸ்' என்ற பெயரில் அடுக்குமாடி குடியிருப்புக்கள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- கோலாலம்பூரில்(மலேசியா) மலேசிய நால்வர் மன்றம் ஏற்பாட்டில் 'தமிழ் மறையாம் திருமறை மாபெரும் மாநாடு' நடைபெற்றது.

**பிப்ரவரி – 22**

- 2017ம் ஆண்டின் ஊழல் குறைந்த நாடுகள் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்தையும், டென்மார்க் 2 வது இடத்தையும் பிடித்துள்ளது.

- இலங்கை அரசின் சார்பில் தமிழர்களுக்கென புதிய தொலைக்காட்சியை (பெயர் - நல்லிணக்க தொலைக்காட்சி) அந்நாட்டு அதிபர் மைத்திரிபால சிரிசேன தொடங்கி வைத்தார்.

- சவுதி அரேபிய அரசு, பொழுதுபோக்குத் துறையை ஊக்குவிக்கும் விதத்தில் 64 மில்லியன் டாலர் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

- "கித்தா" புயலால் பாதிக்கப்பட்ட "டோங்கா" நாட்டுக்கு நிவாரண உதவியாக இந்தியா ரூ.6.5 கோடி வழங்கியுள்ளது.

- அமெரிக்காவின் 27 மாகாணங்களில் "யோகாத்தான்" எனப்படும் சூரிய நமஸ்கார யோகா பயிற்சி நடைபெற்றது.

- துபாய் இந்திய துணை தூதரகத்தில் தொழிலாளர்களது குறைகளை தீர்க்க உதவும் 'ஓபன் ஹவுஸ்' எனப்படும் சிறப்பு நிகழ்ச்சி நாளை (23-02-2018) நடைபெறுகிறது.

## பிப்ரவரி – 23

- உலகிலேயே முதல் முறையாக ரஷ்யாவில் உள்ள அணு உலை ஒன்றுக்கு, பாதுகாப்புடன் கட்டமைக்கப்பட்டுள்ள அணு உலை என்ற சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது

- 2017ம் ஆண்டிற்கான ஊழல் நிறைந்த நாடுகள் பட்டிலை டிரான்பரன்சி இன்டர்நேஷனல் என்ற தனியார் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் சோமாலியா முதல் இடத்தில் உள்ளது. இந்தியா 81வது இடத்தில் உள்ளது

- நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து மீட்கும் அதிநவீன கருவிகளை இந்தியக் கடற்படைக்கு வழங்க உள்ளதாக பிரிட்டன் பாதுகாப்புத் தளவாட உற்பத்தி நிறுவனம் ஜேஃப்டி தெரிவித்துள்ளது

- பாகிஸ்தானில் முதல் முறையாக பார்லிமெண்ட் எம்.பி.யாக ஹிந்து மதத்தைச் சேர்ந்த(கிருஷ்ண குமாரி கோல்ஹி) தலித் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

- கார்களின் தேசமாகிய ஜெர்மனியில், பொது மக்கள் தங்கள் சொந்த வாகனங்களை பயன்படுத்துதை தவிர்க்கும் விதத்தில்(காற்று மாசுப்பாட்டை குறைக்க) இலவச பொது போக்குவரத்து திட்டத்தை அந்நாட்டு அரசு அறிமுகம் செய்துள்ளது. இந்த விதியை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை மற்றும் அபாராதமும் விதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது

## பிப்ரவரி – 24

- இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து அமைக்கும் 'இயற்கை எரிவாயு குழாய்' திட்டம் துர்க்மெனிஸ்தானில் நேற்று தொடங்கியது

- துபாயில், விமானங்களை விட அதிவேகமாக செல்லும் 'ஹைபர்லூப்'(காந்த விசையால் இயங்கும் தொழில்நுட்பம்) போக்குவரத்து சேவையை அந்நாட்டு அரசு அறிமுகம் செய்யவுள்ளது

- ஜெருசலேம்(இஸ்ரேல்) நகரில் மே மாதம் அமெரிக்க தூதரகம் அமைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்

- நேபாளத்தில், ஜனாதிபதி தேர்தல் மார்ச் 13ம் தேதி நடைபெறும் என அந்நாட்டு தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது

## பிப்ரவரி – 25

- பெய்ஜிங்கில் (சீனா) இருந்து நியூயார்க் (அமெரிக்கா) நகருக்கு குறைந்த நேரத்தில் மிக அதிவேகமாக (6 ஆயிரம் கி.மீ.) பறந்து செல்லும் ஹைபர் சோனிக் விமானத்தை சீனா தயாரித்துள்ளது.

- ஸ்மார்ட்போன் மூலம் ஏடிஎம்-ல் பணம் எடுக்கும் பாக்கெட் சேஞ்ச் என்ற புதிய செயலியை அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்பிரிகா பண்டாரி (இந்திய மாணவி) உருவாக்கியுள்ளார்.

- பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கு சொற்களை ஒலி வடிவில் மாற்றி தரும் வகையில் ஸ்மார்ட் கிளாஸ் ஒன்றை ஜப்பான் வடிவமைத்துள்ளது.

- அணு ஆயுத சோதனை நடத்தி, அனைத்து நாடுகளையும் அச்சுறுத்தும் வடகொரியா நாட்டின் மீது புதியதாக 56 தடைகளை அமெரிக்கா அரசு விதித்துள்ளது.

## பிப்ரவரி – 26

- சர்வதேச நிதி நடவடிக்கை சிறப்புக் குழு(எ.ஃ.ப்ஏடிஎ.ஃ.ப்) துணைத் தலைவர் பதவிக்கு சீனா தேர்வு செய்யப்பட்டுள்ளது

- உலகில் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டுகள் பட்டியலில், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் நாட்டு கடவுச்சீட்டுகள் முன்னிலை வகிக்கின்றது

- குவைத்தில் பணிக்கான விசா காலம் முடிந்த பிறகு சட்ட விரோதமாக தங்கியிருப்போர், தங்களது ஆவணங்களை சமர்பித்து, எந்த அபராதமும் இல்லாமல் பொது மன்னிப்பு பெற்று தங்கள் சொந்த நாடுகளுக்கு செல்லலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது

- பிரிட்டனில், குளிர்பானங்கள் அருந்துவதற்காக பயன்படும் ‘ஸ்ட்ரா’ எனும் பிளாஸ்டிக் குழாய்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

- சீனாவில் அதிபர் பதவியை, ஒருவர் தொடர்ந்து 2 முறை மட்டுமே வகிக்க முடியும் என்ற நிபந்தனையை நீக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது

- இலங்கை பிரதமர் ‘ரணில் விக்ரமசிங்கேவுக்கு’ அந்நாட்டு அரசு ஒழுங்கு, தேசிய கொள்கை அமைப்பு மற்றும் பொருளாதார விவகாரங்கள் ஆகிய 3 துறைகளை கூடுதலாக அளித்துள்ளது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்செல், 'பிகமிங்' என்ற புத்தகத்தை 2018 நவம்பர் மாதம் வெளியிடுவதாக அறிவித்துள்ளார்

**பிப்ரவரி – 27**

- நெதர்லாந்தில் அனைவரும் கட்டாயமாக உடல் உறுப்பு தானம் செய்ய வேண்டும் என்ற புதிய சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

- சவுதி அரேபியாவில், பெண்கள் இராணுவத்தில் சேர அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- ஐ.நா பாதுகாப்பு கவுன்சில், 30 நாள் போர் நிறுத்தத்தை உடனே அமல்படுத்த வேண்டும் என்று சிரியா அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

- ஆஸ்திரேலியாவின் புதிய துணைப் பிரதமராக 'மைக்கேல் மெக்கார்மாக்' நேற்று பதவியேற்றார்.

- ஜோர்டான் மன்னர் அப்துல்லா 3 நாள் பயணமாக இன்று இந்தியா வரவுள்ளார். இந்தியாவின் வர்த்தக கூட்டாளி நாடுகளின் வரிசையில் ஜோர்தான் 4வது இடத்தில் உள்ளது.

**பிப்ரவரி – 28**

- மொரிஷீயஸ் நாட்டில் மார்ச் 12ம் தேதி நடைபெறவுள்ள 50வது ஆண்டு சுதந்திர தின விழாவில் இந்திய குடியரசு தலைவர் 'ராம்நாத் கோவிந்த்' சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்

- வெளிநாட்டு மக்களிடமிருந்து சிறுநீரகங்களை தானம் பெற இலங்கை அரசு தடை விதித்துள்ளது

- சிங்கப்பூரில் பயங்கரவாத தாக்குதலின் போது, பொதுமக்கள் புகைப்படங்கள், வீடியோக்கள் எடுப்பதற்கும், தகவல் பரிமாற்றம் செய்வதற்கும் தடை விதிக்கும் வகையில் புதிய சட்டம் அமல்படுத்தபடவுள்ளது

- சவுதி அரேபியாவில் சமூக முன்னேற்றம் மற்றும் தொழிலாளர் நலத்துறையில் முதன் முறையாக 'தாமாதர் பின்ட் யூசுப் அல் ரம்மா' என்ற பெண் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்

- ஆப்கானிஸ்தான்(துணை வெளியுறவு துறை மந்திரி - ஹெக்மத் கர்சாய்), இந்தியா(தூதரக இணை செயலர் - தீபக் மிட்டல்), அமெரிக்கா(அலைஸ்

வெல்ஸ்) ஆகிய 3 நாடுகளும் 4வது முறையாக முத்தரப்பு கூட்டத்தினை நடத்தியது. இதில் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு, அமைதி, ஜனநாயகம், பன்முக தன்மை மற்றும் தீவிரவாதத்தில் இருந்து விடுவிப்பதற்கு 3 நாடுகளும் இணைந்து பணியாற்றுவது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது

- ஜெர்மனியில், காற்று அதிகளவில் மாசடைவதால் டீசல் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

- ஆயுத வலிமை குறைப்புக்கு என்று தனி அமைச்சகத்தை அமைக்க நியூசிலாந்து பிரதமர் 'ஜெசிந்தா ஆண்டர்ன்' உத்தரவிட்டுள்ளார்

- சீனா மின்காந்த தண்டவாளம் மூலம் மணிக்கு 600 கி.மீ வேகத்தில் செல்லும் இரயிலை தயாரித்து வருவதாக அறிவித்துள்ளது

- கலி∴போர்னியாவில் உலகின் மிகப் பெரிய விமானத்தின்(ஸ்ட்ராடோலாஞ்ச்) சோதனை ஓட்டம் வெற்றியில் முடிந்தது

# தேசிய செய்திகள்

**பிப்ரவரி – 1**

- சர்வதேச அளவில் ஜனநாயகம் சிறந்து விளங்கும் நாடுகள் பட்டியலில் இந்தியா 42வது இடத்தில் உள்ளது

- நாட்டில் முதல் முறையாக உத்திரப் பிரதேசத்தில், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தை சேர்ந்த 1000 சட்டங்கள் ரத்து செய்யப்பட உள்ளது

- தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டம் மூலம் 'மோடி கேர்' என்ற பெயரில் உலக தரம் வாய்ந்த மருத்துவ திட்டம் செயல்படுத்தப்படும் என அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்

- கர்நாடக அரசு ஊழியர்களுக்கு 30 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது

- உலக அளவில் இந்தியாவில் தான் பெண் பைலட்கள் அதிகம் பேர் உள்ளனர் என்று மத்திய அமைச்சர் ஜெயந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- மீனவர்கள் மற்றும் கால்நடை துறையினருக்கும் 'கிசான்' கடன் அட்டைகள் வழங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் அறிவித்துள்ளார்

- குடியரசு தலைவர், ஆளுநர், துணை குடியரசுத் தலைவர்களின் ஊதியம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது

- தமிழகம் உள்ளிட்ட 10 மாநிலங்களில் இன்று முதல் சரக்கு போக்குவரத்து வாகனங்கள் 'இ-வே பில்' எனும் இணைய வழி ரசீதை எடுத்துச் செல்வது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது

- உத்திரப் பிரதேச அரசு, தாமதமாக பணிக்கு வருபவர்கள், தகவல் தெரிவிக்காமல் விடுமுறை எடுப்பவர்களின் ஒரு நாள் சம்பளம் பிடித்தம் செய்யும் புதிய விதிமுறையை நடைமுறைப்படுத்தியுள்ளது

## பிப்ரவரி – 2

- 1947ம் ஆண்டிற்கு பிறகு இதுவரை 87 முறை மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு வரை 25 நிதியமைச்சர்கள் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளனர்

- 2018 மத்திய பட்ஜெட்டில் முனைவர் ஆய்வுப் படிப்பை மேற்கொள்ளும் 1000 பி.டெக் மாணவர்களுக்கு ஆய்வு உதவித்தொகை(ஃபெலோஷிப்) வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

- டிஜிட்டல் இந்தியா திட்டத்துக்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.3,073 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

- பொதுத் துறை நிறுவனங்களில் அரசுக்கு சொந்தமான பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் வரும் நிதி ஆண்டில் ரூ.80,000 கோடி திரட்ட மத்திய அரசு நிர்ணயித்துள்ளது

- மாதச் சம்பளம் வாங்குவோர் வருமான வரி செலுத்துவதில் இருந்து ரூ.40000 வரை சலுகை பெறும் வகையில் நிலையான கழிவுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

- முத்ரா திட்டத்தின் கீழ் ரூ.3லட்சம் கோடி கடன் வழங்க மத்திய பட்ஜெட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

- கோவா மாநிலத்தில் பொது இடங்களில் மது அருந்தத் தடை விதிக்கும் சட்டம் விரைவில் அமல்படுத்தப்படும் என கோவா முதல்வர் அறிவித்துள்ளார்

## பிப்ரவரி – 3

- கவுகாத்தியில்(அசாம்) இன்று உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது
- தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டம் ஆகஸ்ட் 2ம் தேதி அமல்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது
- உபர் செயலி மூலம் ஆம்புலன்ஸ் சேவை பெறும் புதிய நடைமுறையை கேரள அரசு அறிமுகம் செய்துள்ளது
- பெற்றோரை கைவிடும் ஊழியர்களின் சம்பளத்தை பிடித்தம் செய்து, பெற்றோரின் வங்கி கணக்கில் செலுத்தும் சட்டத்தை அசாம் அரசு கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்தியது. இந்தியாவிலேயே இத்தகைய சட்டம் கொண்டுள்ள ஒரே மாநிலம், அசாம் ஆகும்
- அலுவலக நேரத்தில் ஆலோசனைக் கூட்டம் மற்றும் சைட் விசிட் என்று கூறி வேலை நேரத்தை புறக்கணிக்கும் அரசு ஊழியர்களை ஜ.பி.எஸ் கருவி மூலம் கண்காணிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது
- பிரதமர் நரேந்திர மோடி எழுதிய 'எக்ஸாம் வாரியர்ஸ்' என்ற புத்தகம் இன்று வெளியிடப்படவுள்ளது
- ஆதார் இல்லாத மக்களுக்கு ரேஷன் பொருள்களை மறுக்கக் கூடாது என்று மத்திய அரசு மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது
- **மத்திய பட்ஜெட் - 2018**
  - செல்போனுக்கான இறக்குமதி வரி 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது
  - சுகாதாரம் மற்றும் கல்விக்கான வரி 4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது
  - மூத்த குடிமக்களுக்கான வங்கி சேமிப்புக்கு 50 ஆயிரம் வரை வட்டி இல்லை
  - 250 கோடி வரை விற்பனை செய்து முதலீடு ஈட்டும் நிறுவனங்களுக்கு 25 சதவீதம் வரி

- எளிதான இன்டர்நெட் வசதியை பெரும் வகையில் கிராம புறங்களில் 5 லட்சம் ‘ஹாட்ஸ்பாட்’ வசதி

- விவசாய பொருட்களுக்கு சந்தை விலையை விட 1.5 மடங்கு குறைந்த விலை அளிக்கப்படும்

- வெள்ளத் தடுப்பு பணிகளுக்காக ‘ஆப்ரேஷன் கிரீன்’ திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

- பஞ்சாப், அரியானா, உத்திரப்பிரதேசத்தில் விவசாய கழிவு பொருட்களை அகற்றுவதற்கான இயந்திரங்களை கொள்முதல் செய்ய மானியம் வழங்கப்படும்

- ‘உஜ்வாலா’ திட்டத்தை விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 8 கோடி கிராமப்புற பெண்களுக்கு இலவச எல்பிஜி இணைப்பு வழங்கப்படும்

- 2022ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சொந்த வீடு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

- திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலையை ஊக்குவிக்க புதிதாக 2 பள்ளிகள் தொடக்கம்

- பழங்குடியின மாணவர்களுக்கு ‘ஏகலைவன்’ பள்ளிகள் தொடங்கப்படும்

- ‘ஜன்தன் யோஜனா’ திட்டத்தின் கீழ் 60 கோடி வங்கி கணக்குகள் துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது

- 2018-2019ம் ஆண்டில் மூலதன செலவினங்களுக்கு ரூ.1,48,528 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

- 2019ம் அண்டுக்குள் 4000 கி.மீ புதிய இரயில் தண்டவாளம் அமைக்கப்பட உள்ளது

- 500 நகரங்களில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான ‘அம்ருத்’ திட்டம் அறிவிப்பு. குடிநீர் விநியோகத்துக்காக 494 திட்டங்களுக்கு ரூ.19,428 கோடி வழங்கப்படும்

We Shine Academy ™

- பிடெக், ஐஐடி, ஐஐஎஸ்யில் உயர்க்கல்வி மற்றும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்
- வதோதராவில் சிறப்பு இரயில்வே பல்கலைக்கழகம் அமைக்கப்படும்
- ஆதரவற்ற குழந்தைகள், விதவைகள் சமூக பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படும்
- 25 ஆயிரத்திற்கும் அதிகமான பயணிகள் வரும் இரயில் நிலையங்களில் எஸ்கலேட்டர் வசதி செய்யப்பட்டுள்ளது
- பொதுத்துறை நிறுவனங்களில் முதலீட்டை திரும்ப பெறும் இலக்கு ரூ.80 ஆயிரம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 4**

- இந்த ஆண்டு இறுதிக்குள் ஏர் இந்தியா நிறுவனம் தனியார் மயமாக்கப்படும் என்று ஜெயந்த் சின்கா (விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர்) தெரிவித்துள்ளார்.
- 2016-2017ம் ஆண்டு இந்தியாவுக்கு அன்னிய முதலீடாக ரூ.4 லட்சம் கோடி வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
- புதுடெல்லியில் உள்ள இரண்டு தமிழ்நாடு இல்லங்களின் புதிய பெயர்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (வைகை இல்லத்துக்கு பதிலாக வைகை தமிழ்நாடு இல்லம் எனவும், பொதிகை இல்லத்துக்கு பதிலாக பொதிகை தமிழ்நாடு இல்லம்)

**பிப்ரவரி – 5**

- அசாம் மாநிலத்தில் ரூ.1,950 கோடி செலவில் இரட்டை வர்த்தக மைய கோபுரம் அமைக்கப்படவுள்ளது.
- நாடு முழுவதும் மனிதர்களின் ஆதார் எண் போல 4000 பசுக்களுக்கும் அடையாள எண் வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- தூர்தஷன் தொலைக்காட்சியின் 24 மணி நேர செய்தி சேனலான டிடி நியூஸ், 100 நாடுகளில் ஒளிபரப்ப மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

- திருநங்கைகளுக்காக நல வாரியம் அமைக்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கி மகாராஷ்டிரா அரசு உத்தரவிட்டுள்ளது.

- 24 மணி நேரத்தில் 980 விமானங்களை கையாண்டு மும்பை ஏர்போர்ட் சாதனைப் படைத்துள்ளது.

- நிக்காநாமா எனப்படும் முஸ்லீம்கள் திருமண ஒப்பந்தத்தில் முத்தலாக் சொல்ல மாட்டேன் என்ற உறுதி மொழி இடம்பெறுமாறு மாற்றம் செய்யப்படும் என அகில இந்திய தனிநபர் சட்ட வாரியம் தெரிவித்துள்ளது.

**பிப்ரவரி – 6**

- இந்தியாவிலேயே ஜி.எஸ்.டி மூலமாக அதிக வரி கட்டிய மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் இரண்டாவது இடம் பிடித்துள்ளது. தமிழகத்திற்கு அடுத்தபடியாக கர்நாடகம் வந்துள்ளது.

- இஸ்ரோ, "ஜிஎஸ்எல்வி மார்க்2" ராக்கெட் மூலம் சந்திராயன்2 என்ற விண்கலத்தை விரைவில் நிலவுக்கு அனுப்ப உள்ளதாக இஸ்ரோ தலைவர் "சிவன்" தெரிவித்துள்ளார்.

- கொல்கத்தா நகரின் அடையாள சின்னமான "ஹவ்ரா பாலம்" அமைத்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

**பிப்ரவரி – 7**

- வெளிநாடு சென்று மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்களும் நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியம் என்ற சட்டத்திருத்தம் விரைவில் வரவுள்ளது என்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

- பிளாஸ்டிக் ஆதார் கார்டுகளை பயன்படுத்தக் கூடாது என்றும் பதிவிறக்கம் செய்யப்படும் ஆதார் அட்டைகள் மட்டுமே செல்லும் என்றும் ஆதார் ஆணையம் அறிவித்துள்ளது

- தாழ்த்தப்பட்டோர் நலத் துணைத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மாநில அரசுக்கு இதுவரை ரூ.60,003 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தாவர்சந்த் கெலாட் தெரிவித்துள்ளார்

- தமிழகத்தில் வரும் 2022ம் அண்டுக்குள் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது

- தமிழகத்தில் ஆசிரியர்கள் நியமனத்தல் வெயிட்டேஜ் முறையை தொடர தமிழக அரசு திட்டமிட்டுள்ளது

- டெல்லியில் முன்னாள் பிரதமர் மூவர் உள்பட ஐந்து பேருக்கு அரசுக் குடியிருப்புகள் வழங்கப்படவுள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது

**பிப்ரவரி – 8**

- நாட்டிலேயே முதல் முறையாக ஐக்கிய அமீரகத்திற்கு வேலைக்காக செல்பவர்களுக்கு நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கும் முறையை கேரள அரசு தொடங்கியுள்ளது

- இந்தியாவில் விவாகரத்து அதிகம் நடக்கும் மாநிலங்களின் தரவரிசையில் உத்திரப்பிரதேசம் முதல் இடத்திலும், கேரளா 2வது இடத்திலும் உள்ளது. தமிழ்நாடு 12வது இடத்தில் உள்ளது

- தமிழகத்தில் கூடங்குளத்திலும், கர்நாடகம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஹரியாணா ஆகிய மாநிலங்கள் உள்பட மொத்தம் 12 அணு உலைகளை இந்தியாவில் நிறுவ மத்திய அரசு, நிர்வாக ரீதியாக ஒப்புதல் அளித்து நிதி ஒதுக்கி உள்ளது

- கோவாவில் இரும்புத் தாது வெட்டி எடுப்பதற்கு 88 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சுரங்க உரிமைகளை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது

- 2007ம் ஆண்டு முதல் 2017 வரை எச்.ஐ.வி நோயால் அதிகம் பாதிக்கப்பட்வர்கள் உள்ள மாநிலங்கள் பட்டியலில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா, 1, 2வது இடத்தில் உள்ளது. தமிழகம் 6வது இடத்தில் உள்ளது

- வாகன ஓட்டுநர் உரிமத்துடன் ஆதாரை இணைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது

- காந்தி நகரில்(குஜராத்) சர்வதேச பிளாஸ்டிக் கண்காட்சியின் 10வது பதிப்பு நேற்று தொடங்கியது

- பாதுகாப்பான பார்சல் பரிமாற்றத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச ‘பிளாட்ரேட் பார்சல் பாக்ஸ்’ சேவை வரும் 15ம் தேதி முதல் நிறுத்தப்படுவதாக தபால் துறை அறிவித்துள்ளது

- முதல் முறையாக டிஜிட்டல் தொழில்நுட்ப வடிவிலான கல்வி சான்றிதழை உயர்கல்வி நிறுவனங்களில் வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது

**பிப்ரவரி – 9**

- சர்வதேச அளவில் அறிவுசார் சொத்துரிமை நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்கும் நாடுகளுக்கான தரவரிசை பட்டியலை அமெரிக்க தொழில் வர்த்தக சபை வெளியிட்டது. இதில் இந்தியா 44வது இடத்தில் உள்ளது

- 2018ம் ஆண்டு சிறந்த பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் அசாமை சேர்ந்த தேஜ்பூர் மத்திய பல்கலைக்கழகம் 100வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் தேஜ்பூர் மத்திய பல்கலைக்கழகம் 7வது இடத்தில் உள்ளது

- நீட் தேர்வுக்கான மாணவர் விண்ணப்பங்களில் ஆதார் எண்ணை கட்டாயமாக இணைக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது

- மாநிலத்தில் நடைபெறும் குற்றங்களை குறைக்கும் நோக்கத்தில் '∴பீல் தி ஜெயில்' என்ற பெயரில் ஒரு நாள் சிறை வாழ்வு திட்டத்தை தெலுங்கானா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது

- நாட்டில் அனைத்து மாநிலங்களிலும் குழந்தைகள் நலவாரியம் அமைக்கப்பட வேண்டும் என மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

- 3 கோடி ஏழை குடும்பங்களுக்கு விரைவில் இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது

- 2016-2017ம் கல்வி ஆண்டில் விதிமுறைகளை பின்பற்றாத காரணத்தினால் தமிழகத்தில் 20 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் உள்பட 133 கல்வி நிறுவனங்களின் அங்கீகாரத்தை மத்திய அரசு ரத்து செய்துள்ளது

- கோவாவில் முதன்முறையாக பைக் ஆம்புலன்ஸ் வசதியை அம்மாநில முதல்வர் மனோகர் பாரிக்கர் அறிமுகம் செய்யவுள்ளார். இந்தியாவில் முதன் முறையாக கர்நாடகா மாநிலத்தில் பைக் ஆம்புலன்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது

- நாட்டிலேயே முதன் முறையாக தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு விபத்து காப்பீடு வழங்கப்பட உள்ளது என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்

## பிப்ரவரி – 10

- நிதி ஆயோக் வெளியிட்ட சுகாதார குறியீடு(மருத்துவம் மற்றும் சுகாதார சேவை) தரவரிசை பட்டியலில் கேரளா முதலிடத்தில் உள்ளது. தமிழகம் 3வது இடத்தில் உள்ளது

- அமெரிக்க தூதரகம் சார்பில் 'நெக்சஸ் தொடக்க மையம்' இன்று டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது

- 2014-2016ம் ஆண்டு காலக்கட்டத்தில் வரதட்சணை கொடுமையால் அதிகமாக உயிரிழந்தவர்கள் பட்டியலில் உத்திரப்பிரதேச மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது

- 2017ம் நிதியாண்டின் முதல் 10 மாத கால கட்டத்தில் நேரடி வரி வசூல் 19.3 சதவீதம் அதிகரித்து ரூ.6.95 கோடியாக உயர்ந்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது

- ஓட்டுநர் உரிமம் பெற முகவரி மற்றும் வயது சான்றாக ஆதாரைப் பயன்படுத்தலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது

- அனுமதியற்ற நீண்ட நாள் விடுப்பில் இருக்கும் 13 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய இரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது

- உத்திரப் பிரதேச மாநிலத்தில் இயங்கி வரும் 'தாருல் உலமா தேவ்பந்த்' என்ற இஸ்லாமிய அமைப்பு இஸ்லாமியர்கள் ஆயுள் காப்பீடு செய்வதற்கு 'பத்வா' என்னும் தடையை விதித்துள்ளது

- நாடு முழுவதும் 2017-2018ம் நிதியாண்டில் இந்திய இரயில்வே துறையில், டிக்கெட் எடுக்காமல் மற்றும் உரிய டிக்கெட் எடுக்காமல் பயணித்த பயணிகளிடம் இருந்து அபராதம் மூலம் ரூ.867 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது என்று இரயில்வே துறை தெரிவித்துள்ளது

- இந்தியாவில் முதன்முறையாக கர்நாடகா மாநிலத்தில் மின்சார வாகனங்களுக்காக 'சார்ஜிங் பாயின்ட்' அமைக்கப்பட உள்ளது

- மத்திய அமைச்சர்கள் (மனோஜ் சின்கா, தர்மேந்திர பிரதான்) புவனேஸ்வரம் - டெல்லிக்கு வாரம் ஒருமுறை செல்லும் ராஜதானி விரைவு இரயில் சேவையை இன்று தொடங்கி வைத்தனர்

## பிப்ரவரி – 11

- உலகில் வேகமாக தண்ணீர் காலியாகும் நகரங்களின் பட்டியலில் பெங்களூரு இடம் பிடித்துள்ளது.

- போலி நிறுவனங்கள், மோசடி தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றை ஒழிக்க நிறுவனங்களின் அடையாளமாக பான் எண்ணை பயன்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- ஆந்திராவில் திருடர்களை பிடிக்க புதிய மொபைல் செயலி (லாக் ஹவுஸ் மானிட்டரிங் சிஸ்டம் மொபைல் ஆப்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ஆதார் எண் இல்லாத காரணத்திற்காக எந்த ஒரு குடிமகனுக்கும், எந்த ஒரு சேவையும் நிறுத்தப்படக் கூடாது என்று மத்திய அரசிடம் தனித்துவ அடையாள ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

- ஆந்திராவின் பல்வேறு திட்டப் பணிகளுக்காக மத்திய அரசு 1,269 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது.

## பிப்ரவரி – 12

- உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடக்கும் நீதிமன்ற அறைகளில் வழக்கறிஞர்கள் செல்போன் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது

- பொலிவுறு நகரங்கள் திட்டத்துக்காக மாநிலங்களுக்கு மத்திய அரசு இதுவரை ரூ.9,940 கோடியை ஒதுக்கியுள்ளது

- பள்ளிகளில் கரும்பலகைக்களுக்கு பதிலாக ‘ஸ்மார்ட் போர்டுகள்’ அறிமுகப்படுத்தப்படும் என மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ‘உபேந்திர குஷ்வாகா’ தெரிவித்துள்ளார்

- இந்தியாவில் முதன்முறையாக திருநங்கைகளுக்கு கேரளாவில் கூட்டுறவு சங்கம் அமைக்கப்படும் என்று கேரள அரசு தெரிவித்துள்ளது

- பெங்களூருவில் உள்ள ஓரியன் மாலில் 10வது சர்வதேச திரைப்பட விழா பிப்ரவரி 22ம் தேதி துவங்குகிறது

- நிர்பயா நிதியில் இருந்து இதுவரை ரூ.825 கோடி மட்டுமே செலவாகியுள்ளது என ஆர்டிஐ சட்டத்தின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது

- தமிழகத்தில், '2வது உலக முதலீட்டாளர் மாநாடு 2019' ஜனவரி 23, 24ம் தேதிகளில் நடைபெறும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது

- தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உருவப்படத்தை சபாநாயகர் தனபால் இன்று திறந்து வைத்தார்

**பிப்ரவரி – 13**

- இந்தியாவில் பணக்கார முதலமைச்சர்கள் பட்டியலில் ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு முதலிடத்தில் உள்ளார்

- தெலுங்கானா மாநிலத்தில் பள்ளிகளில் தெலுங்கு மொழியை கட்டாயமாக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது

- 'மேக் இன் இந்தியா' திட்டத்தை தொடர்ந்து 'ஸ்டடி இன் இந்தியா'(ஒரு லட்சம் வெளிநாட்டு மாணவர்களை இந்திய கல்வி நிறுவனங்களில் பயில வரவழைத்தல்) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்ய உள்ளது

- மத்திய அரசின் மருத்துவக் காப்பீட்டு திட்டம் 'மகாத்மா காந்தியின்' பிறந்த நாளில் அமல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

- இந்திய தொழில் முனைவோருக்கு சர்வதேச வர்த்தக வாய்ப்புகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை உதவி செய்கிறது. இந்த திட்டத்திற்கு 'ஷி டிரேட்ஸ்' என்று ஐ.நா பெயரிட்டுள்ளது. 2030க்குள் 3 லட்சம் இந்திய பெண்களுக்கு சர்வதேச தொழில் வாய்ப்பு அளிக்க ஐ.நா திட்டமிட்டுள்ளது

- பெங்களூரு பிடிஎம் 'லே அவுட்டில்' கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் மையத்தை அமைச்சர் 'ராமலிங்கரெட்டி' நேற்று தொடங்கி வைத்தார்

- ராஜஸ்தானில் ரூ.50 ஆயிரம் வரை விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று ராஜஸ்தான் அரசு அறிவித்துள்ளது

- 3 ஆண்டில் இந்தியாவின் வனப்பரப்பு 6,778 சதுர கி.மீ அதிகரித்துள்ளது என சுற்றுச்சூழல் அமைச்சர் 'ஹர்ஸ் வர்தன்' தெரிவித்துள்ளார்

- விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநரகம், டிக்கெட் உறுதி செய்யப்பட்ட பயணிகளை விமானத்தில் ஏற்ற அனுமதி மறுத்தால் அதற்கான இழப்பீட்டுத் தொகையை விமான நிறுவனங்கள் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது

- ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் இந்தியாவின் ஒரே 'ஆர்ச் டேம்'(இடுக்கி அணைக்கட்டு) கட்டப்பட்டு 42 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது

**பிப்ரவரி – 14**

- பெருமூளை வாதம், ஆட்டிசம் உள்ளிட்ட பல நோய்களால் குறைபாடு உள்ளவர்கள் 42 வயது வரை யுபிஎஸ்சி தேர்வு எழுதலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது

- சாதாரண மொபைல் போனிலும் ஜிபிஎஸ், மற்றும் எச்சரிக்கை பட்டன் இருக்க வேண்டும் என உத்தரவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது

- மத்திய அரசு அறிவித்த தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தில் இருந்து தாங்கள் விலகி கொள்வதாக மேற்கு வங்க முதலமைச்சர் 'மம்தா பானர்ஜி' அறிவித்துள்ளார்

- புதிதாக அறிமுகமாகவுள்ள அதிவேக இரயில்களுக்காக 10,000 கி.மீ தூரத்துக்கு புதிய 'ஹை ஸ்பீட்' வழிதடத்தை அமைக்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது

- இந்திய ராணுவத்திற்கு 7.40 லட்சம் துப்பாக்கிகள் வாங்க ராணுவ கொள்முதல் குழு ஒப்புதல் அளித்துள்ளது

- ஆதார் இல்லை என்றாலும், மக்களுக்கு அரசு சலுகைகள் வழங்குவதை நிறுத்தக் கூடாது என்று மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது

- இரயில் பாதைகளில் ஏற்படும் யானைகளின் உயிரிழப்பை தடுக்க தேனீக்களின் ஒலியை எழுப்பும் புதிய முயற்சியில் இந்திய இரயில்வே நிர்வாகம் ஈடுபட்டுள்ளது

- குடும்ப தலைவிகளின் பெயரில் இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் மத்திய அரசின் 'உஜ்வாலா திட்டம்', பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் முக்கிய நடவடிக்கை என்று குடியரசுத் தலைவர் 'ராம்நாத் கோவிந்த்' தெரிவித்துள்ளார்

## பிப்ரவரி – 15

- 'ஒற்றுமைக்கான சிலை' என அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேலின், 182 அடி உயர சிலை, அவரது பிறந்த நாளான அக்டோபர் 31ல் திறக்கப்படும் என குஜராத் அரசு தெரிவித்துள்ளது

- மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகளுக்கு ஜிஎஸ்டி வரி கிடையாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது

- விவசாயிகள் பிரச்சனை குறித்து விவாதிக்க '2022ம் ஆண்டு தேசிய மாநாடு' என்ற பெயரில் தேசிய மாநாடு டெல்லியில் பிப்ரவரி 19 மற்றும் 20ம் தேதிகளில் நடைபெறுகிறது

- விரைவு இரயில்களில் மார்ச் 1ம் தேதி முதல் முன்பதிவு செய்த பயணிகளின் பட்டியல் ஒட்டப்பட மாட்டாது என இரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது

- மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான பிஇஎம்எல் நிறுவனம் தயாரித்த 3 போகிகள், மெட்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது

- மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை ரூ.1000த்திலிருந்து ரூ.1500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது

## பிப்ரவரி – 16

- துபாயில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய அரசின் ஆதார் அட்டை திட்டத்திற்கு, 'அரசு துறையில் வளர்ந்து வரும் சிறந்த தொழில்நுட்பத்திற்க்கான விருது' வழங்கப்பட்டுள்ளது

- திறந்த நிலை கல்வி நிறுவனங்களில் பிளஸ் 2 படிப்பவர்கள் நீட் தேர்வு எழுத முடியாது என்று இந்திய மருத்துவ கவுன்சில் தெரிவித்துள்ளது

- தனியார்துறையில் வேலை தேடுபவர்கள் பதிவு செய்வதற்கு தலைமை தபால் நிலையங்களில் 'நேஷனல் கெரியர் சர்வீஸ்' என்ற அமைப்பு தொடங்கப்பட உள்ளது

- காஷ்மீரில் தேசிய சட்ட பல்கலைக்கழகம் அமைக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது

- ஐரோப்பிய இரயில்வே கட்டுபாட்டு சாதன அமைப்பைப் பின்பற்றி நவீன சிக்னல்களை அமைக்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது என்று இரயில்வே துறை அமைச்சர் 'பியூஷ் கோயல்' தெரிவித்துள்ளார்

- உத்திரப் பிரதேச மாநில பட்ஜெட், உத்திரப்பிரதேச மாநில சட்டப் பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட உள்ளது

- தமிழக அரசு பள்ளிகளில் யோகா பயிற்சி வகுப்புகள் துவக்கப்படும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் 'செங்கோட்டையன்' தெரிவித்துள்ளார்

- சர்வதேச பொறியியல் கொள்முதல் கண்காட்சி மற்றும் மாநாடு மார்ச் 8-11ம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது என சிறு, குறு நிறுவனங்கள் துறை செயலர் 'தர்மேந்திர பிரதாப் யாதவ்' அறிவித்துள்ளார்

- மருத்துவ உபகரணங்களுக்காக தனி அமைச்சகம் அமைக்கும் திட்டம் குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது என இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் அனந்த குமார் தெரிவித்துள்ளார்

**பிப்ரவரி – 17**

- ஈரானின் எண்ணெய் மற்றும் இயற்கை வளத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளதாக அந்நாட்டு அதிபர் 'ஹசன் ரூஹானி' தெரிவித்துள்ளார்

- வங்கிகள் அளித்துள்ள விவசாயக் கடன்களுக்கான வட்டி விகிதத்தை நீதிமன்றங்கள் ஆய்வுக்குட்படுத்த முடியும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது

- 'சந்திரன் -2 விண்கலம்' ஏப்ரல் மாதம் ஏவப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது

- இசை கலைஞர் 'டி.வி. சங்கரநாராயணனுக்கு' 'தியாக பிரம்ம நாத விபூஷன் விருதை' ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா வழங்கியுள்ளது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

- **கர்நாடக அரசின் பட்ஜெட்**

  - ➢ மீனவ பெண்களின் நலனை கருத்தில் கொண்டு வர்த்தக மற்றும் கிராம வங்கிகளில் ரூ.50000 ஆயிரம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது

  - ➢ விவசாயிகள் மரணம் அடையும் தருவாயில் இருக்கும் போது அவர்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கி இருந்தால் அதில் ரூ.1 லட்சம் வரை தள்ளுபடி செய்யப்படும்

  - ➢ வன விலங்குகள் தாக்கி உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வீதம் பென்ஷனும், நிவாரணமாக ரூ.5 லட்சமும் வழங்கப்படும்

  - ➢ மின் பகிர்வு மையம் அமைக்க ரூ.14,136 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

  - ➢ சட்டத்துறை மேம்பாட்டு வசதிக்காக ரூ.1247 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

  - ➢ சுற்றுலா தளங்களை மேம்படுத்த ரூ.459 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

  - ➢ பத்திரிக்கையாளர்களின் ஓய்வூதிய தொகை ரூ.1000ல் இருந்து ரூ.3 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது

  - ➢ சஞ்சீவினி திட்டத்தின் கீழ் பணியில் இருக்கும் போது அல்லது விபத்தில் உயிரிழக்கும் தருவாயில் இன்சூரன்ஸ் தொகையாக ரூ.5 லட்சம் வரை வழங்கப்படும்

  - ➢ சினிமா தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்தும் விதமாக சிறந்த 8 திரைப்படங்களை தேர்வு செய்து அதன் தயாரிப்பாளர்களுக்கு தலா ரூ.20 லட்சம் சிறப்பு ஊக்க தொகையாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 18**

- பள்ளி நிர்வாகத்தின் கவனக்குறைவால் நீட் தேர்வு எழுத முடியாமல் போன 15 மாணவர்களுக்கு ரூ.30 லட்சம் இழப்பீடு வழங்க தேசிய உரிமைகள் ஆணையம் (என்எச்ஆர்சி) உத்தரவிட்டுள்ளது

- வர்த்தகம், எரிசக்தி, தீவிரவாத ஒழிப்பு தொடர்பாக ஈரான் மற்றும் இந்தியா இடையே 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது

WeShine Academy™

- அன்னிய ஆடவர்களிடம், வளையல் அணிந்து கொள்ளக் கூடாது. திருமணம் போன்ற விழாக்களில், ஆடவர்களுடன் அமர்ந்து உணவு உண்ணக் கூடாது என முஸ்லீம் பெண்களுக்கு ‘தாரும் உலும் தேவ்பந்த்’ எனப்படும் முஸ்லீம் அமைப்பு ‘பத்வா’ எனும் தடை விதித்துள்ளது

- சிறப்பு இரயில்களில் மொத்தமாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய விரும்புபவர்கள் இனி ஆன்லைன் மூலமாக அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

- திருநங்கைகளுக்காக தனி கழிவறை அமைக்க நாக்பூர் மாவட்ட அரசு முடிவு செய்துள்ளது

- பா.ஜ.காவின் புதிய தலைமையகத்தை பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்

- சென்னை பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழி கல்வியில் 2018-2019ம் கல்வியாண்டு முதல் மாற்றம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 19**

- இந்தியாவில் அதிவேக பயணம் மேற்கொள்ளும் ‘ஹைபர் லூப்’ போக்குவரத்து முதன்முதலாக மும்பை - புனே இடையே தொடங்கப்பட உள்ளது. இதற்கு பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டினார்

- தமிழகத்தின் கோட்டா, தோடா மொழிகள் உள்பட 42 இந்திய மொழிகள் அழிவின் விளிம்பில் உள்ளதாக ‘யுனெஸ்கோ’ ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது

- தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் ‘நாஸ்காம் இந்தியா தலைமை மாநாடு’ (ஐஎல்எ்.ப்), தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ‘உலக காங்கிரஸ் மாநாடு’ இன்று தொடங்குகிறது

- பீகாரில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வு அறைக்குள் ஷூ மற்றும் சாக்ஸ் அணிந்து வர தடை விதிக்கப்பட்டுள்ளது

- கேரளா முழுவதும் உள்ள கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணைகளின் தகவல்களை ஒருங்கிணைத்து, ‘புவியியல் தகவல் அமைப்பு’ என்ற திட்டத்தின்கீழ் டிஜிட்டல் மயமாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது

- நாட்டிலேயே முதல் முறையாக கேரள அரசு, பாதாளச் சாக்கடையை சுத்தம் செய்யும் பணியில், ரோபோ எந்திரத்தை ஈடுபடுத்தியுள்ளது. ஜென்ரோபாட்டிக்ஸ் என்ற நிறுவனம் இந்த ரோபோவை தயாரித்துள்ளது. இதற்கு 'பெருச்சாளி' என்று பெயரிடப்பட்டுள்ளது

- விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அறிவிக்கும் திட்டம் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கு டெல்லி வேளாண் அறிவியல் மையத்தில் இன்று தொடங்கியுள்ளது

- 'மோடி கேர்' என்று அழைக்கப்படும் தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தில் இணைய கர்நாடக அரசு மறுப்பு தெரிவித்துள்ளது

- நவி மும்பையில்(மகாராஷ்டிரா) அமைய உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டினார்

**பிப்ரவரி – 20**

- டிவிட்டரில் ஒரு கோடிக்கும் அதிகமான பின்தொடர்புகளை கொண்ட இந்திய அரசியல்வாதிகள் பட்டியலில் பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார். குஜராத் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் 2வது இடத்திலும், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 5வது இடத்திலும் உள்ளனர்.

- எம்பி., எம்.எல்.ஏ-களுக்கு மாத சம்பளத்தை முடிவு செய்ய தனி அமைப்பை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது

- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 6 லட்சம் குழந்தைகள் பிறந்த 28 நாட்களுக்குள் இறந்து விடுவதாக யூனிசெ∴ப் அமைப்பு ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளது

- குஜராத் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் குஜராத்தி மொழி கட்டாய பாடமாக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார்

- இந்தியாவின் காந்தி நகர்(ஜெய்ப்பூர்) இரயில்வே நிலையம், முழுவதும் பெண்கள் மட்டுமே பணிப்புரியும் இரயில்வே நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இது இந்தியாவில் பெண்கள் மட்டும் பணி புரியும் முதல் இரயில் நிலையமாக என கருதப்படுகிறது

- கேரளாவில், 'தேசிய வாழைப்பழ திருவிழா' நடைபெற்று வருகிறது. 150க்கும் அதிமான வாழைப்பழ வகைகள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது

- இரயில்வேயில் பணியாற்றும் மிக முக்கிய மூத்த அதிகாரிகள் பணி நிமித்தமாக வெளியூர்களுக்கு செல்லும் போது பயன்படுத்தி வந்த சொகுசு இரயில் பெட்டிகள் முதன் முறையாக தனி நபர்களின் பயன்பாட்டுக்கு வழங்க இரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது

- தமிழகத்தில், 'நமது புரட்சித்தலைவி அம்மா' என்ற தமிழ் நாளிதல் பிப்ரவரி 24ம் தேதி முதல் அதிகாரப்பூர்வமாக வெளியாகவுள்ளது

- மின்வாரிய ஊழியர்களுக்கு 2.57 காரணி ஊதிய உயர்வுக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது என சிஐடியூ தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது

**பிப்ரவரி – 21**

- உத்திரப்பிரதேசத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

- பெண்களுக்கு தொடக்கக் கல்வி முதல் முதுகலைப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படும் என கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளது.

- 500 பெண் தலைவர்கள் பங்கேற்கும் சர்வதேச மகளிர் மாநாடு பெங்களூரில் உள்ள 'தி ஆர்ட் ஆ்.ப் லிவிங்' சர்வதேச மையத்தில் பிப்ரவரி 23-25வரை நடைபெறுகிறது.

- உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், ஒடிஸா ஆகிய நான்கு மாநிலங்களில் ரூ.11,661 கோடி மதிப்பில் 6 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- தமிழகத்தில் மார்ச் 5 முதல் 3 நாட்கள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு நடைபெறவுள்ளது.

- ஹைதராபாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கில் சவுதி அரேபியாவின் சோபியா ரோபோ பெண் உரிமைகளை குறித்து கலந்துரையாடல் செய்ய உள்ளது.

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் ரூ.600 கோடி செலவில் உலகின் மிக உயரமான புத்த ஸ்தூபி அமைக்கப்படும் என்று மாநில முதல்வர் ரகுவர் தாஸ் தெரிவித்துள்ளார்.

**பிப்ரவரி – 22**

- உத்திரப் பிரதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு நிறுவனங்களுடன் 4.28 லட்சம் கோடி ரூபாய் மதிப்புக்கு 1,045 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது என முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

- 'மிஷின் டு மிஷின்' எனப்படும் விமானங்கள், கப்பல்கள் போன்ற போக்குவரத்து துறைகளுக்கு பயன்படுத்தப்படும் 'சிம்' கார்டுகளின் எண்கள் மற்றும் ஸ்வைப்பிங் மிஷின்களுக்கான எண்கள் 10 இலக்கத்திலிருந்து 13 இலக்கமாக மாற்றப்பட்டு ஜூலை 1 முதல் அமலுக்கு வருவதாக டிராய் தெரிவித்துள்ளது.

- இந்திய கடலோர பாதுகாப்பில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேவையாற்றிய 'வஜ்ரா' கடலோர ரோந்து கப்பல் விடைபெற்றுள்ளது.

- அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை 2.096 சதவீதம் அதிகரிக்க ஆந்திர மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**பிப்ரவரி – 23**

- உலக சுகாதார அமைப்பு, உலகில் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலை வெளியிட்டது. இதில் ஷபோல்(ஈரான்) நகரம் முதலிடத்தில் உள்ளது. இந்தியா 2வது இடத்தில் உள்ளது

- குஜராத் ஜாம்நகரில் நடைபெற்ற போர் விமானப் பயிற்சியில், 'மிக்-21 பைசன்' என்ற போர் விமானத்தை 'அவனி சதுர்வேதி' தனியாக இயக்கியுள்ளார். 'நாட்டில் போர் விமானத்தை தனியாக இயக்கிய முதல் பெண்' என்ற சாதனையை படைத்துள்ளார்

- மத்திய அரசின் முக்கிய திட்டங்களில் ஒன்றான, டிஜிட்டல் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் அதிகாரிகளுக்கு, பிரதமர் நரேந்திர மோடி பெயரிலான விருது வழங்கப்பட உள்ளது

- மத்தியப் பிரதேச பல்கலைக்கழக வளாகத்தில், பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டு, அதற்கு பதிலாக சைக்கிளை பயன்படுத்தும் முறை சோதனை அடிப்படையில் துவங்கப்பட்டுள்ளது

- கோவா முதலமைச்சர் 'மனோகர் பாரிக்கர்', சட்டப்பேரவையில் 2018-2019ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளார். இதில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு ரூ.548 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.144 கோடி உபரி பட்ஜெட் வருவாயாக கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

- சர்வதேச திரைப்பட விழா பெங்களூரில் நேற்று தொடங்கியது

- விஜிபி உலகத் தமிழ் சங்கம் சார்பில் சென்னையில் இருந்து கனடா மற்றும் அமெரிக்காவிற்கு திருவள்ளுவர் சிலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

- தமிழக மின்வாரிய ஊழியர்களுக்கான 11வது ஊதிய உயர்வு ஒப்பந்தம் நேற்று நிறைவேறியது. இதில் மின்வாரிய ஊழியர்கள் அனைவருக்கும் 2.57 காரணி ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 24**

- பீகார் மாநிலத்தில் 2 குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கு, ஆசிய வளர்ச்சி வங்கி 8.4 கோடி டாலர்(ரூ.544 கோடி) கடனுதவி வழங்க உள்ளது

- கனடா மற்றும் இந்தியா இடையே தொழில், மின்சாரம், கல்வி, மருத்துவ சேவை, தகவல் தொழில்நுட்பம், அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது

- குஜராத் மாநிலத்தில், 1.11லட்சம் குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டுடன் காணப்படுகின்றனர் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது

- லோக்பால் அமைக்க பிரதமர் மோடி தலைமையில் மார்ச் 1ம் தேதி கூட்டம் நடைபெற உள்ளது என உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது

- அடுத்த 5 ஆண்டுகளில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்கு உயர்த்த கேரள அரசு திட்டமிட்டுள்ளது

- தேசிய கல்வி நிறுவனங்களுக்கு தரவரிசை சட்டமைப்பு மூலம் தர வரிசை வெளியிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

## பிப்ரவரி – 25

- மும்பை துறைமுகத்திற்கு கிழக்கே அமைந்துள்ள எலிபண்டா தீவுகளில் உள்ள மூன்று கிராமங்கள் 70 ஆண்டுகளுக்கு பிறகு மின்சார இணைப்புகளை பெற்றுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

- துறைமுக செயல்பாடுகள் அனைத்தையும் டிஜிட்டல் மயமாக்க உள்ளதாக புதுச்சேரி கவர்னர் கிரண்பேடி தெரிவித்துள்ளார்.

- இமயமலையின் உச்சியில் உள்ள ஹமனூர் கிராமம் முதன் முறையாக சோலார் பேனல்கள் எனப்படும் சூரியத் தகடுகள் மூலம் மின்சார வசதி பெற்றுள்ளது.

- யூனியன் பிரதேசமான டாமன் - டையூ மேம்பாட்டுக்காக ரூ.1000 கோடியில் வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார்.

- ஆரோவில் (விழுப்புரம்) பொன்விழா ஆண்டு சிறப்பு அஞ்சல் தலையை பிரதமர் மோடி வெளியிட்டுள்ளார்.

- புதுச்சேரியை சிறந்த சுற்றுலா தலமாக்க மத்திய அரசு உதவி செய்வதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## பிப்ரவரி – 26

- 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தனி ஆதார் அட்டையை (பால் ஆதார் அட்டை – நீல நிறம்) வழங்கும் திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது

- நீட் தேர்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்களது ஆதார் தகவல்களை கட்டாயம் பதிவிட வேண்டும் என்று சிபிஎஸ்இ கல்வி வாரியம் அறிவித்துள்ளது

- ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராய்ப்பூரில் குப்பைகளை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'ட்ரோஷ் மஹோத்சவ்' திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது

- நாடு முழுவதும் காவல்துறைகளில் பணிபுரிவோரில் 7.28 சதவீதம் பேர் மட்டுமே பெண்கள் என்று மத்திய உள்துறை அமைச்சக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன

- உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் வறுமை கோட்டுக்கு கீழே வாழும் மக்களுக்கு இலவச பஸ் பயணச் சலுகை அளிக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது

- தமிழகத்தின் முன்னாள் முதல்வர்(ஜெயலலிதா) பிறந்த நாள் விழாவில்(பிப்ரவரி 24), பிரதமர் நரேந்திர மோடி 70 மரக்கன்றுகள் நடும் திட்டம் மற்றும் மகளிருக்கான இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்

- இரயிலில் மகளிர் பிரிவின் கீழ் நிரப்பப்படாத படுக்கைகள், இருக்கைகளை, காத்திருப்பு பட்டியலில் இருக்கும் மகளிருக்கு முதலில் ஒதுக்கீடு செய்துவிட்டு, அதன்பின் மூத்த குடிமக்களுக்கு அளிக்க வேண்டும் என இரயில்வே உத்தரவிட்டுள்ளது

**பிப்ரவரி – 27**

- 'இந்தியா – கொரியா வணிக உச்சி மாநாடு' இன்று டெல்லியில் நடைபெறுகிறது.

- 'ஒக்கி' புயல் மற்றும் பருவமழையால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு ரூ.133.05 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

- அரசின் செயல்பாடுகளை இன்டர்நெட் மூலம் செயல்படுத்துவது குறித்த '21வது தேசிய மாநாடு' ஹைதராபாத்தில் நடைபெறுகிறது. இதில் ஆதார் அட்டை மூலம் 2.95 கோடி போலி ரேசன் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என 'சி.ஆர் சவுத்திரி'(மத்திய உணவுத்துறை இணை அமைச்சர்) தெரிவித்துள்ளார்.

- இந்திய கடற்படை சார்பில் மார்ச் 6ம் தேதி தொடங்க உள்ள கூட்டு கடற்பயிற்சியில் பங்கேற்கும்படி விடுத்த அழைப்பை 'மாலத்தீவு' நிராகரித்துள்ளது.

- உத்திரப் பிரதேசத்தில் ஹோலி பண்டிகையின் போது ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

- அனைத்து வகை கடல்சார் போக்குவரத்துக்கும் மெத்தனாலை எரிபொருளாக பயன்படுத்த திட்டமிட்டு வருவதாக 'நிதின் கட்கரி'(மத்திய கப்பல் மற்றும் சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர்) தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் உள்ள இரட்டை பதிவு பெயர்களை நீக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

## பிப்ரவரி – 28

- 16 நாடுகளை சேர்ந்த கடற்படையினருடன் இணைந்து இந்தியா நடத்தும் ‘மிலன்’ கூட்டுப் போர் பயிற்சி மார்ச் 6ம் தேதி அந்தமான் நிகோபர் தீவுகளையொட்டிய கடற்பகுதியில் நடைபெறுகிறது

- 2014-2017 வரை பிரதமர் ‘நரேந்திர மோடி’ மேற்கொண்ட வெளிநாடு பயண செலவுகள் குறித்த விவரங்களை வெளியிட மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

- கடைகளுக்கு சீல் வைக்கும் பிரச்சனைக்கு, தீர்வுகாண, ‘மாஸ்டர் பிளான் 2021’ திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி(பிஎ.ஃ.ப்) கணக்குகளை ‘உமங்’ என்ற செயலி மூலம் ஆதார் எண்ணுடன் இணைக்கும் வசதி தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது

- இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளில், 2016-2017ம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட 35 விருதுகளில் 11 விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பெற்றுள்ளது

- நாடு முழுவதும் ஹோலி பண்டிகையை முன்னிட்டு 500 சிறப்பு இரயில்கள் இயக்கப்படுவதாக இந்திய இரயில்வே துறை அறிவித்துள்ளது

- தமிழகத்தில் 94 தபால் மையங்களில் பாஸ்போர்ட் சேவை மையங்கள் திறக்கப்படவுள்ளது

- குழந்தைகளுக்கு ஆதார் கார்டு பெற பள்ளி ஐடி கார்டினை அடையாள அட்டையாக சமர்ப்பிக்கலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது

# விளையாட்டு செய்திகள்

**பிப்ரவரி – 1**

- இந்திய விளையாட்டு ஆணையத்தின் (சாய்) இயக்குநராக 'நீலம் கபூர்' நியமிக்கப்பட்டுள்ளார்
- விஜய்ஹசாரே கிரிக்கெட் போட்டி பிப்ரவரி 5ம் தேதி தொடங்குகிறது
- 55வது தேசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் தொடரின் ஒரு பகுதி சென்னையில் நேற்று துவங்கியது
- சையது முஸ்தாகக் அலி கோப்பைக்கான தென் மண்டல 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணியின் கேப்டன் அம்பத்தி ராயுடு, நடுவரின் முடிவை எதிர்த்து வாக்குவாதம் செய்ததால் இந்திய கிரிக்கெட் வாரியம் அடுத்த 2 ஆட்டங்களில் விளையாட தடை விதித்துள்ளது
- மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் நடைபெறும் 'கேலா இந்தியா பள்ளி விளையாட்டு போட்டியில்' உயரம் தாண்டுதலில் தமிழக மாணவன் சி.பிரவீன் மற்றும் மாணவி கொலஷியா ஆகியோர் தங்கம் வென்றனர்

**பிப்ரவரி – 2**

- இந்திய ஓபன் குத்துச்சண்டை போட்டியில் மகளிருக்கான 48 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் மேரி கோம் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்
- இந்திய ஓபன் குத்துச்சண்டை போட்டியில் 60 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் சரிதா தேவி வெள்ளி பதக்கம் பெற்றார்
- இந்திய ஓபன் குத்துச்சண்டை போட்டியில் 69 கிலோ எடை பிரிவில் தினேஷ் தாகர் வெள்ளிப் பதக்கம் வென்றார்
- ஈரானில் நடைபெற்ற ஆசிய உள்ளரங்கு தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் 'ஷீனா நெலக்கல் வார்கே' மகளிருக்கான மும்முறை தாண்டுதல் போட்டியில் வெள்ளி வென்றார்

- இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட்கோலி 41 போட்டிகளில் 11 சதம் மற்றும் 9 நாடுகளில் செஞ்சூரி அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்

- கொச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் போது ஊக்கமருந்து பயன்படுத்தியதாக வாழ்நாள் தடை விதிக்கப்பட்ட 43 ரஷிய வீரர்களில், 28 பேர் மீதான தடையை விளையாட்டுக்கான நீதிமன்றம் நீக்கியுள்ளது

- 2018-2019ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சகத்துக்கு மத்திய அரசு ரூ.2,196.36 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது

**பிப்ரவரி – 3**

- சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது

- ஜுனியர் உலகக் கோப்பையை நான்காவது முறையாக இந்திய அணி வென்றுள்ளது

- தேசிய அளவிலான ‘விளையாடு இந்தியா’ போட்டியில் துப்பாக்கி சுடுதல் பிரிவில் சென்னையைச் சேர்ந்த ‘ரித்திக் ரமேஷ்’ வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்

- தமிழக கிரிக்கெட் அணியில் உள்ள வாஷிங்டன் சுந்தருக்கு, ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ், ‘இளம் சாதனையாளர் விருதை’ அளித்துள்ளது

- ஸ்குவாஷ் சர்வதேச தரவரிசையில், இந்திய வீரர் சௌரவ் கோஷல் 14வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

- பாரிஸில் நடைபெற்ற கால்பந்து தொடரில் வீரரை உதைத்த நடுவருக்கு(டோனி சப்ரோனுக்கு) 3 மாதங்களுக்கு எவ்வித போட்டியிலும் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது

## பிப்ரவரி – 4

- யு-19 உலகக்கோப்பை போட்டியில் இளம் வயதில் கேப்டனாகப் பங்கேற்று கோப்பையை வென்ற கேப்டன் எனும் பெருமையை "பிரித்வி ஷா" பெற்றுள்ளார்.

- யு-19 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதை அடுத்து அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டுக்கு 50 லட்சமும், வீரர்களுக்கு 30 லட்சமும், அணியின் ஊழியர்களுக்கு 20 லட்சமும் ஊக்கத்தொகையாக பிசிசிஐ அறிவித்துள்ளது.

- தென்னாப்பிரிக்கா அணிக்கான புதிய கேப்டனாக "எய்டன் மார்கிராம்" நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து மகளிர் ஒற்றையர் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

## பிப்ரவரி – 5

- இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பி.வி. சிந்து வெள்ளி பதக்கம் வென்றார். அமெரிக்காவின் பெய்வன் சங் சாம்பியன் பட்டம் வென்றார்.

- இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் யூகி ஷீ சாம்பியன் பட்டம் வென்றார்.

- மகளிர் பிக் பாஷ் டி20 லீக் தொடரில் 2வது முறையாக சிட்னி கிக்ஸர்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

- பிக் பாஷ் டி20 லீக் தொடரில் அடிலெய்டு ஸ்டிரைக்கர்ஸ் முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

- மின்சார வாரிய அணிகளுக்கு இடையிலான தேசிய கூடைப்பந்து போட்டியில் கேரள மின்வாரியம் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

- தி இந்து குழுமம், தைரோகேர் நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட மாநில அளவிலான கபடி போட்டியில் ஏலகிரி செந்தமிழ் அணி முதலிடம் பிடித்துள்ளது.

**பிப்ரவரி – 6**

- உலக ஜூனியர் சர்கியூட் பைனல்ஸ் டேபிள் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் “மானவ் தக்கர்” (இந்திய வீரர்) வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் “போலிஞ்சர்” அனைத்து விதமான கிரிக்கெட் தொடரில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

- இந்தியாவுக்கு எதிரான 3-வது ஒருநாள் போட்டியிலிருந்து தென்னாப்பிரிக்கா அணி வீரர் “குயின்டன் டிகாக்” விலகியுள்ளார்.

- ரஷ்யாவில் நடைபெற்ற செயின்ட் பீட்டார்ஸ்பர்க் ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டித் தொடரின் ஒற்றையர் பிரிவில் “பெத்ரா குவித்தோவா” சாம்பியன் பட்டம் வென்றார்.

- சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக இந்திய லூஜ் வீரர் “ஷிவா கேசவன்” அறிவித்துள்ளார்.

**பிப்ரவரி – 7**

- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பாட்மிண்டன் விளையாட்டில் விளையாட இந்தியா ‘ஏ’ பிரிவில் இடம் பெற்றுள்ளது

- முதல் முறையாக குளிர்க்கால ஒலிம்பிக் போட்டியை தென் கொரியா நடத்தவுள்ளது. அந்நாட்டின் பியோங்சாங் நகரில் இப்போட்டியை நடத்த சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி(ஐஓசி) அனுமதி வழங்கியுள்ளது. தென்கொரியா 2வது முறையாக ஒலிம்பிக் போட்டியை நடத்துகிறது

- தேசிய பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டு போட்டியில் தமிழக அணி 2வது இடத்தில் உள்ளது

- விளையாடு இந்தியா போட்டியில் அடுத்த சில ஆண்டுகளில் மகளிர் சாம்பியன்ஷிப் போட்டி சேர்க்கப்படும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் தெரிவித்துள்ளார்

- கார் பந்தயங்களுக்கான எ∴ப்ஐஏ ஆசிய அமைப்பின் துணைத் தலைவராக சுஜித் குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்

## பிப்ரவரி – 8

- விக்கெட் கீப்பராக 400 விக்கெட் எடுத்த முதல் இந்தியர் என்ற புதிய சாதனையை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் டோனி நிகழ்த்தியுள்ளார்

- மும்பை இந்தியன்ஸ் ஐபிஎல் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக மலிங்கா(இலங்கை) நியமிக்கப்பட்டுள்ளார்

- ஜுனியர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் வென்ற இந்திய அணியின் பயிற்சியாளரான ராகுல் டிராவிட்டுக்கு, தொழில்முறை கட்டணமாக ரூ.2.4 கோடியை பிசிசிஐ வழங்கியுள்ளது

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியில் உள்ள ஜுலன் கோஸ்வாமி, ஒரு நாள் கிரிக்கெட்டில் 200 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார்

- தென் ஆப்பிரிக்க மகளிர் அணிக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது

- 2019ம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கோப்பை கால்பந்து போட்டி வரை இந்தியக் கால்பந்து அணியின் பயிற்சியாளராக ஸ்டீ∴பன் கான்ஸ்டன்டைன் (இங்கிலாந்து) நீடிக்கவுள்ளார்

## பிப்ரவரி – 9

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவில் உள்ள பியாங்சாங் நகரில் இன்று(பிப்ரவரி 09) தொடங்குகிறது

- உலக குத்துச்சண்டை போட்டிகள் டெல்லியில் இன்று தொடங்குகிறது. இதில் ‘இந்தியன் டைகர்ஸ்’ என்ற பெயரில் இந்திய அணி விளையாடுகிறது

- விளையாடு இந்தியா போட்டியில் சிறுவர்களுக்கான ஹாக்கிப் போட்டியில் ஒடிஸா முதலிடம் பிடித்துள்ளது

- பள்ளிகளுக்கு இடையே தேசிய அளவிலான விளையாட்டு போட்டியில் அரியானா மாநிலம் 38 தங்கம், 102 பதக்கங்களுடன் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது. தமிழகத்துக்கு 28 பதக்கங்கள் கிடைத்துள்ளது


We Shine Academy

- இந்திய கிரிக்கெட் வாரியம், ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியின் மூலம் கிடைத்த வருமானத்தில் ரூ.3,500 கோடியை வருமான வரியாக செலுத்தியுள்ளது

- இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ‘லசித் மலிங்கா’ சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து விரைவில் ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ளார்.

**பிப்ரவரி – 10**

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில்(ஐசிசி) முதல் பெண் தனி இயக்குநராக ‘இந்திரா நூயி’(இந்தியா) நியமிக்கப்பட்டு உள்ளார்

- குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ‘கிராஸ்-கன்ட்ரி’ பனிச்சறுக்கில் பெண்களுக்கான ‘ஸ்கையாத்லான்’ போட்டியில் ஸ்வீடனைச் சேர்ந்த சார்லொட்டே தங்கப் பதக்கம் வென்றுள்ளார்

- அகில இந்திய அளவில் நடைபெற்ற தீயணைப்பு வீரர்களுக்கான விளையாட்டு போட்டிகளில் தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் 23 பதக்கங்களை(11 தங்கம், 9 வெள்ளி, 3 வெண்கலம்) வென்றுள்ளனர்

- ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற விளையாட்டு வீரர்களின் ஓய்வூதியம்(ரூ.10000 இருந்து ரூ.20000) மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற வீரர்களின் ஓய்வூதியங்கள்(ரூ.8000 இருந்து ரூ.16000) இருமடங்காக உயர்த்தப்பட்டது

**பிப்ரவரி – 11**

- ஓமனில் நடைபெற்று வரும் ITTF உலக ஜுனியர் மற்றும் கேடட் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது.

- தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 4வது ஒரு நாள் போட்டி நடைபெற்று வருகிறது இதில் “ஷிகர் தவான்” (இந்திய அணியின் துவக்க வீரர்) சதம் அடித்ததை அடுத்து, 100வது ஒருநாள் போட்டியில் சதம் அடித்த முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்துள்ளது.

## பிப்ரவரி – 12

- ஆசிய விளையாட்டு இன்விடேஷனல் தடகள போட்டியில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது

- பியோங்சங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ஸ்னோபோர்டு பிரிவில் அமெரிக்காவின் 'ரெட்மான்ட் ஜெரார்டு' தங்கப்பதக்கம் வென்றார்

- இந்தியாவுக்கு எதிரான 4வது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் தாமதமாக பந்துவீசியதாக தென் ஆப்பிரிக்க அணி வீரர்களுக்கு ஐசிசி அபராதம்(வீரர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில், 10 சதவீதம், கேப்டன் எய்டன் மார்க்ரம் சம்பளத்தில், 20 சதவீதம்) விதித்துள்ளது

- 8வது சீனியர் தேசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் இரயில்வே விளையாட்டு மேம்பாட்டு வாரியம் சாம்பியன் பட்டம் வென்றது

- ஐபிஎல் தொடரில் பங்கேற்கும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் விளம்பர பங்குதாரராக முத்தூட் நிதி நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது

- 23-வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆடவருக்கான கிராஸ் கன்ட்ரி ஸ்கையிங் போட்டியில் நார்வே நாட்டைச் சேர்ந்த சைமன் ஹக்ஸ்டாட் க்ருகர், மார்ட்டின், ஹன்ஸ் கிறிஸ்டர் ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் வென்றனர்

## பிப்ரவரி – 13

- ஓமன் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுஹானா சாய்னி தங்கப் பதக்கம் வென்றார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் '∴பிகர் ஸ்கேட்டிங்' பிரிவில் கனடா ஜோடி தங்கப் பதக்கம் வென்றது

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ∴ப்ரீஸ்டைல் ஸ்கையிங் போட்டியில் கனடாவின் 'மிக்கெல் கிங்ஸ்பரி' முதலிடம் பிடித்துள்ளார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான 1500மீ 'ஸ்பீடு ஸ்கேட்டிங்' போட்டியில் நெதர்லாந்து தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றது


We Shine Academy

- இந்தோனேஷியாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டு தேர்வுப் போட்டியில் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவுக்கு 10 பதக்கங்கள் உறுதியாக்கியுள்ளது

**பிப்ரவரி – 14**

- ஐசிசியின் ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது

- ஆசிய தடகள போட்டியில் 5000மீ ஆண்கள் ஓட்டப்பந்தயத்தில் தமிகத்தின் 'ஜி.லட்சுமணன்' தங்கப்பதக்கம் வென்றார்

- ஆசிய தடகள போட்டியில் மகளிர் 5000மீ ஓட்டத்தில் இந்தியாவின் 'சூரியா லோகநாதன்' தனியாக பங்கேற்று தங்கம் வென்றார்

- இந்திய கிரிக்கெட் அணியின் 'ரோஹித் சர்மா' அதிக சிக்ஸர்கள் அடித்த இந்திய வீரர்கள் பட்டியலில் 2வது இடத்தில் உள்ளார்

- இந்தியாவின் ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான 'தீபா கர்மாகர்' காமன்வெல்த் போட்டியில் இருந்து விலகியுள்ளார்

- தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி முதல் முறையாக வெற்றி பெற்றது

- குளிர்கால ஒலிம்பிக் தொடரில் மகளிருக்கான ஸ்னோபோர்டு ஹா∴ப் பைப் பிரிவில் அமெரிக்காவின் 'சோலோ கிம்' தங்கப் பதக்கம் வென்றார்

**பிப்ரவரி – 15**

- தேசிய பெண்கள் கால்பந்து போட்டியில் தமிழக அணி முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது

- ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக 'சிமொன்ஸ்' நியமிக்கப்பட்டுள்ளார்

- சட்டக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான அகில இந்திய விளையாட்டு போட்டிகள் கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் செங்கல்பட்டு சட்டக் கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது


We Shine Academy

- 23வது குளிர்கால ஒலிம்பிக் பனிச்சறுக்கு போட்டியில் அமெரிக்காவை சேர்ந்த 'ஒயிட்' தங்கப் பதக்கம் வென்றார்

- ஏ.எஸ். வேதநாயகம் நினைவுக்கோப்பைக்கான மாநில அளவிலான ஹாக்கி போட்டியில் ஐஓபி அணி வெற்றி பெற்றது

**பிப்ரவரி – 16**

- சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்திய கால்பந்து அணி 102வது இடத்தில் உள்ளது

- ஆசிய குத்துச்சண்டை தேர்வுப் போட்டியில் இந்தியா 5 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது

- அபுதாபி விளையாட்டு கவுன்சில் ஆதரவுடன், அல் அய்னில் நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் தமிழகத்தை சேர்ந்த செய்யது அலி (திருநெல்வேலி) வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 'பிகர் ஸ்கேட்டிங்' பிரிவு விளையாட்டில் அல்ஜோனா சேவ்சென்கோ மற்றும் மசோட் புருணா(ஜெர்மனி) ஜோடி தங்கப்பதக்கம் வென்றது

- 5 ஆண்டுகளுக்கு பின் இந்திய ஹாக்கி அணியின் விளம்பரதாரராக(ஸ்பான்சர்) ஒடிஸா மாநில அரசு பொறுப்பேற்றுள்ளது

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 'பையத்லான்' பந்தயத்தில்(கம்பி ஊன்றி பனியில் சறுக்குவது) பெண்கள் தனிநபர் பிரிவில் ஸ்வீடனை சேர்ந்த 'ஹன்னா ஓபெர்க்' தங்கப் பதக்கத்தை வென்றார்

**பிப்ரவரி – 17**

- டி20 மும்பை லீக் கிரிக்கெட் போட்டியின் தூதராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் 'சச்சின் டெண்டுல்கர்' நியமிக்கப்பட்டுள்ளார்

- இந்திய அணியின் முன்னாள் கேப்டன் டோனி சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 600 கேட்சை பிடித்தவர் என்ற சாதனையை படைத்துள்ளார்

- செக் குடியரசில் நடைபெற்ற ஜுனியர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் 'மானவ் தக்கார் - மானுஷ் ஷா' ஜோடி ஆடவர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றது

- ஏடிபி தரவரிசையில் சுவிட்சர்லாந்தின் 'ரோஜர் ஃபெடரர்' முதலிடத்தில் உள்ளார். இவர் ஏடிபி தரவரிசையில் அதிக வயதான(36) வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்

- தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 6வது மற்றும் கடைசி ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது

- நேபாளத்தில் நடைபெற்ற ஊரக விளையாட்டுப் போட்டியில் தமிழக விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 18 தங்கம் வென்று சாதனைப் படைத்துள்ளனர்

**பிப்ரவரி – 18**

- தேசிய நடைப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 50 கி.மீ. பிரிவில் ஹரியாணா வீரர் 'சந்தீப் குமார்' சாம்பியன் பட்டம் வென்றார்

- சென்னை ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆஸ்திரேலியாவின் 'ஜோர்டான் தாம்சன்' சாம்பியன் பட்டம் வென்றார்

- நார்வே வீராங்கனை 'பிஜோர்ஜென்' குளிர்க்கால ஒலிம்பிக் போட்டியில் அதிக பதக்கங்களை வென்றவர் என்ற சாதனையை படைத்துள்ளார்

- இங்கிலாந்து வீராங்கனை 'லிஸ்சி யார்னால்டு' குளிர்கால ஒலிம்பிக் ஸ்கெல்டன் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்

- குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான கிராஸ் கன்ட்ரி ஸ்கீயிங் போட்டியில் பிரிஸ்டைல் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் 'டாரியோ கலோக்னா' தங்கப்பதக்கம் வென்றார்

- தூத்துக்குடியில் நடைபெற்ற மாநில இறகு பந்து போட்டியில் பெண்கள் பிரிவில் மதுரை அணியும், ஆண்கள் பிரிவில் கோவை அணியும் முதலிடம் பிடித்துள்ளது

## பிப்ரவரி – 19

- கத்தாரில் நடைபெற்ற ஷாட்கன் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் 'சிங் ரத்தோர்' வெள்ளிப் பதக்கம் வென்றார்
- தேசிய நடைப் பந்தய சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் பிரிவில் 'சௌம்யா பேபி'(டெல்லி) தங்கப் பதக்கம் வென்றார்
- நெதர்லாந்தில் நடைபெற்ற 'ரோட்டர்டாம் ஓபன் டென்னிஸ்' போட்டியில் சுவிட்சர்லாந்தின் 'ரோஜர் ஃபெடரர்' சாம்பியன் பட்டம் வென்றார். இது இவர் பெறும் 97வது பட்டமாகும்
- குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான அல்பைன் பனிச்சறுக்கின் ஜெயன்ட் ஸ்லாலோம் பிரிவில் 'மார்செல் ஹிர்ஸ்செர்' தங்கப்பதக்கத்தை வென்றார்
- ஏ.எஸ் வேதநாயகம் நினைவு கோப்பைக்கான மாநில ஹாக்கி போட்டியில், மத்திய கலால்வரி அணி சாம்பியன் பட்டம் வென்றது
- தி இந்து, குழுமம் தைரோகேர் நிறுவனம் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான கபடி போட்டியில், செல்லூர் எஸ்.கே. கிளப் அணி வெற்றி பெற்றது

## பிப்ரவரி – 20

- 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் 'அதிக கேட்ச் பிடித்த வீரர்களின் பட்டியலில்' இந்திய அணியின் விக்கெட் கீப்பரான எம்.எஸ் டோனி முதலிடத்தில் உள்ளார்
- ஈஎஸ்பிஎன் கிரிக் இன்ஃபோ-2017 விருதுகளில் சிறந்த பேட்ஸ்மனுக்கான விருதினை 'ஹர்மன்பிரீத் கௌர்', டி20 பந்துவீச்சாளர் விருதினை 'யுவேந்திர சாஹல்' மற்றும் சிறந்த அறிமுக வீரர் விருதினை 'குல்தீப் யாதவ்' ஆகியோர் வென்றுள்ளனர்
- சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் இந்திய வீரர் 'யூகி பாம்ப்ரி' 101வது இடத்தில் உள்ளார்
- நியூயார்க் ஓபன் டென்னிஸ் போட்டியில் தென் ஆப்பிரிக்காவின் 'கெவின் ஆண்டர்சன்' சாம்பியன் பட்டத்தை வென்றார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் அணிகளுக்கான ஸ்கை ஜம்பிக் பிரிவில் நார்வே அணி முதலிடம் பிடித்துள்ளது

- இந்தியாவிற்கு எதிரான 5வது ஒரு நாள் போட்டியில் இருந்து தென் ஆப்பிரிக்க வீரர் 'டிவில்லியர்ஸ்'(காயம் காரணமாக) விலகியுள்ளார்

**பிப்ரவரி – 21**

- பாரா பளுதூக்கும் உலகக் கோப்பையில் (45-80 கிலோ வரை) பளுதூக்கும் போட்டியில் இந்தியாவின் சகீனா கடுன் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

- ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டிகளின் துவக்க விழாவில் இந்திய வீராங்கனைகள் சேலைக்கு பதிலாக கோட்-சூட் அணிந்து பங்கேற்க இந்திய ஒலிம்பிக் சங்கம் அனுமதி அளித்துள்ளது.

- ஐசிசியின் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின், பேட்ஸ்மேன்களுக்காக தரவரிசையில் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் பும்ரா மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித் கான் ஆகிய இருவரும் முதலிடத்தில் உள்ளனர்.

- அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கி போட்டிக்கான இந்திய அணியின் கேப்டனான சர்தார்சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இலங்கையின் சுதந்திர கிண்ண முதலாவது போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை மார்ச் 6ம் தேதி விளையாடவுள்ளது.

- ஆடவர் மற்றும் மகளிருக்கான 66வது சீனியர் தேசிய வாலிபால் போட்டிகள் கேரள மாநிலம், கோழிக்கோடில் இன்று தொடங்குகின்றன.

**பிப்ரவரி – 22**

- முத்தரப்பு டுவெண்டி – 20 தொடரில் டக்வொர்த் - லீவிஸ் விதிமுறைப்படி ஆஸ்திரேலிய அணி நியூசிலாந்து அணியை வென்றுள்ளது.

- இந்தியா, இலங்கை, வங்காளதேசம் ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் முத்தொடர் டி-20 கிரிக்கெட் போட்டி வரும் மார்ச் 6ம் தேதி தொடங்க உள்ளது.

- தென்கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான அல்பைன் பனிச்சறுக்கு பிரிவில் இத்தாலியின் சோபியா கோகியா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

- தென்கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஸ்பீடு ஸ்கேட்டிங் அணிகள் பரிவில் ஜப்பான் தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

- தென்கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான ஸ்பீடு ஸ்கேட்டிங் அணிகள் பரிவில் நார்வே தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

- தென்கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பிரீஸ்டைல் பனிச்சறுக்கு போட்டியில் கனடாவின் பிராடி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

- துபாய் டூட்டி பிரீ டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் விளையாட கரோலினா பிளிஸ்கோவா (செக் குடியரசு விராங்கனை) தகுதி பெற்றுள்ளார்.

**பிப்ரவரி – 23**

- இந்திய கிரிக்கெட் மகளிர் அணியின் 'ஹர்மன்பிரீத் கவுர்'(டி20 கேப்டன்) பஞ்சாப் மாநிலத்தின் 'டிஎஸ்பியாக' பதவியேற்கவுள்ளார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக்கில் மகளிருக்கான ஐஸ் ஹாக்கி போட்டியில் அமெரிக்க அணி தங்கம் வென்றது

- குளிர்கால ஒலிம்பிக்கில் அரைவளைய பனிச்சறுக்கு போட்டியில் அமெரிக்க வீரர் 'டேவிட் வைஸ்' தங்கப்பதக்கம் வென்றார்

- குளிர்கால ஒலிம்பிக்கில் பனி உறைந்த ஆற்றில் மீன் பிடிக்கும் போட்டி நடைபெற்றது

- இந்திய கைப்பந்து சம்மேளனம் மற்றும் பேஸ்லைன் வெஞ்சூர்ஸ் நிறுவனம் இடையே அடுத்த 10 ஆண்டுகள் தொழில்முறை இந்தியன் வாலிபால் லீக் போட்டியை நடத்துவது தொடர்பான ஒப்பந்தம், கையெழுத்தானது

**பிப்ரவரி – 24**

- தென் கொரிய ஹாக்கி போட்டியில் பங்கேற்கும் இந்திய மகளிர் அணி கேப்டனாக 'ராணி ராம்பால்' நியமிக்கப்பட்டுள்ளார்

- 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பேட்ஸ்மேன்களுக்கான தரவரிசையில் இந்திய கேப்டன் ‘விராட் கோலி’ 3வது இடத்தில் உள்ளார்

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஃபிகர் ஸ்கேட்டிங்கில் ரஷ்யா முதல் தங்கப்பதக்கத்தை வென்றது

- 69வது ஸ்டார்ன்ட்ஜா நினைவு குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 11 பதக்கங்களை உறுதி செய்துள்ளது

**பிப்ரவரி – 25**

- உலக கோப்பை ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் பெண்களுக்கான ‘வால்ட்’ பிரிவில் அருணா ரெட்டி (இந்திய வீராங்கனை) வெண்கலம் வென்றுள்ளார்.

- ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கேப்டனாக ஸ்டீவன் சுமித் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு டி20 கிரிக்கெட் தொடரில் இருந்து வேலைப்பளு காரணமாக விராட் கோலி மற்றும் தோனி (முன்னாள் கேப்டன்) ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

- இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு டி20 கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ள இந்திய அணியில் தமிழகத்தைச் சேர்ந்த விஜய் சங்கர், வாஷிங்டன் சுந்தர், தினேஷ் கார்த்திக் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- சிறந்த டெஸ்ட் அணிக்கான விருதை இந்திய அணி வென்றுள்ளது. பரிசாக ரூ.10 இலட்சம் அமெரிக்க டாலரை விரைவில் வழங்க உள்ளதாக ஐசிசி தெரிவித்துள்ளது.

- தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான ஐந்தாவது டுவெண்டி-20 போட்டியில் இந்திய பெண்கள் அணி வெற்றி பெற்றுள்ளது.

- தென் கொரியாவில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டன் அணி முதல் முறையாக அதிக பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

## பிப்ரவரி – 26

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் போட்டியில் சிறந்த அணிக்கான விருது 'விராட்கோலி தலைமையிலான இந்திய அணிக்கு' வழங்கப்பட்டுள்ளது

- சர்வதேச குத்துசண்டை போட்டியில் இந்திய வீரர்கள் 'அமித் பாங்கல்'(49 கிலோ எடை பிரிவு) மற்றும் 'விகாஸ் கிருஷன்'(75 கிலோ எடை பிரிவு) தங்கப் பதக்கம் வென்றனர்

- சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீராங்கனை 'மேரி கோம்' வெள்ளிப் பதக்கம் வென்றார்

- 11வது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கேப்டனாக 'அஸ்வின்' நியமிக்கப்பட்டுள்ளார்

- சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் தொடரில் இந்திய வீரர் சமீர் வர்மா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்

- 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் முதல் 4 ஆட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய கேப்டன் என்ற சாதனையை 'ரோகித் சர்மா' படைத்துள்ளார். இவர் சர்வதேச அளவில் 6வது கேப்டன் ஆவார்

- இந்தியா - இலங்கை - வங்கதேசம் விளையாட உள்ள முத்தரப்பு டி20 கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து 'ஹார்திக் பாண்டியா, பும்ரா, புவனேஸ்வர் குமார்' உள்ளிட்ட வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது

- தென் கொரியாவில் நடைபெற்ற 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 14 தங்கம் உள்பட 39 பதக்கங்களுடன் நார்வே அணி முதலிடத்தில் உள்ளது. ஜெர்மனி மற்றும் கனடா 2, 3வது இடத்தை பிடித்துள்ளது

## பிப்ரவரி – 27

- சர்வதேச டென்னிஸ் தரவரிசை பட்டியலில் இரட்டையர் பிரிவில் 'சானியா மெர்சா'(இந்தியா) 13வது இடத்தில் உள்ளார்.

- சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் தமிழக வீரர் 'ராம்குமார் ராமநாதன்' 133வது இடத்தில் உள்ளார்.

- கோல்டு கோஸ்ட் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் இந்திய போட்டியாளர்கள் 227 பேருக்கும் காப்பீடு தொகையாக ரூ.50 லட்சம் வழங்கப்படும் என்று 'எடெல்வீஸ் நிறுவனம்' அறிவித்துள்ளது.

- வங்கதேச கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக, வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் 'கோர்ட்னி வால்ஷ்' நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஆஸ்திரேலியா தொடருக்கு பிறகு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் 'மோர்னி மோர்கெல்' அறிவித்துள்ளார்.

**பிப்ரவரி – 28**

- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் 'ராஜேந்திரகுமார்' 55கிலோ எடைப் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றார்

- அகில இந்திய தேசிய விளையாட்டு போட்டியில் மூத்தோர் பிரிவில் திருவள்ளுரை சேர்ந்த 'சாமுவேல்' என்றவர் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய 3 பதக்கங்களை வென்றுள்ளார்

- 'விஜய ஹஸாரே கோப்பை' கிரிக்கெட் போட்டியில் கர்நாடகா அணி சாம்பியன் பட்டம் வென்றது

- சுவிட்சர்லாந்தின் 'ரோஜர் பெடரலுக்கு', 2017ம் ஆண்டுக்கான 'மீண்டு வந்த வீரர்' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விளையாட்டு உலகின் ஆஸ்கர் விருதான 'லாரல்ஸ் விருதினை' அதிக முறை வென்ற வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

- மார்ச் மாதம் நடைபெறவுள்ள முத்தரப்பு டி20 போட்டியில் இலங்கை அணிக்கு 'தினேஷ் சந்திமால்' கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்

- ஆடவர் மற்றும் மகளிருக்கான உலக ஜீனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் ஜுலை மாதம் நடைபெறவுள்ளது

# வர்த்தக செய்திகள்

**பிப்ரவரி – 1**

- இரயில்வே துறைக்காகத் தனிப்பட்ட பல்கலைக்கழகம் இந்தியாவில் முதல் முறையாக குஜராத்தில் அமைய உள்ளது

- மத்திய அரசு இரயில்வே துறையில் ரூ.1,48,528 கோடி முதலீடு செய்யவுள்ளது

- பெண் ஊழியர்களின் பி.எப் பிடித்தம் 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது

- மொபைல் எண்ணை மாற்றுவதற்கான கட்டணத்தை 79 சதவீதம் (ரூ.19யிலிருந்து ரூ.4 ஆக) டிராய் குறைத்துள்ளது

- பிட்காயின் போன்ற கரண்சிகள் மற்றும் பிற டிரேடிங் சார்ந்த விளம்பரங்களுக்கு பேஸ்புக் இணையதளத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது

- 2018-2019 நிதியாண்டில் காசநோயாளிகளுக்கு மாதம் ரூ.500 உதவித் தொகை ஒதுக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது

- டாபர் இந்தியா நிறுவனத்தின் நிகர லாபம் 13 சதவீதம் அதிகரித்து ரூ.333.03 கோடியாக உள்ளது

**பிப்ரவரி – 2**

- 2.5 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாகச் செய்யப்படும் பணப் பரிமாற்றம் அனைத்திற்கும் பான் எண் கட்டாயம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது

- பெட்ரோல் மற்றும் டீசலுக்கு வசூலிக்கப்படும் கலால் வரியை மத்திய அரசு ரத்து செய்துள்ளது

- சீனாவை தொடர்ந்து இந்தியாவிலும் ஆன்லைன் மூலம் பலசரக்கு விபாரத்தில் அலிபாபா நிறுவனம் ஈடுபட்டுள்ளது

- ஓரியண்டல் இன்சூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் ஆகிய மூன்று பொது காப்பீட்டு நிறுவனங்களை இணைத்து ஒரே நிறுவனமாக மாற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது

- உலகிலேயே முதலாவதாக 10GB Ram கொண்ட ஸ்மார்ட் போனை விவோ நிறுவனம் தயாரித்து வருகிறது

- வருமான வரி மூலம் மத்திய அரசுக்கு ரூ.90 ஆயிரம் கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது

**பிப்ரவரி – 3**

- சர்வதேச ஸ்மார்ட் போன் சந்தையில் 2017 நான்காவது காலாண்டில் ஆப்பிள் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது

- கோவை கொடிசியா வளாகத்தில் 'சர்வதேச கட்டிட கட்டுமான பொருட்கள்' கண்காட்சி தொடங்கியது

- கரூர் வைஸ்யா வங்கியின் மொத்த வணிகம் கடந்த 9 மாதங்களில் ரூ.1,01,955 கோடியை எட்டியுள்ளது

- இணையதளம் மூலம் செயல்படும் நவீன தொழில்நுட்பத்திலான மின் விளக்குகளை விப்ரோ நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது

- ஹிந்துஜா குழுமத்தைச் சேர்ந்த அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மூன்றாம் காலாண்டு லாபம் மும்மடங்கு உயர்ந்துள்ளது

- கோக-கோலா நிறுவனம் விரைவில் தங்களது இந்திய தயாரிப்பான 'தம்ஸ் அப்பினை'(குளிப்பானம்) சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்வதாக அறிவித்துள்ளது

**பிப்ரவரி – 4**

- கவுகாத்தியில் நடைபெற்ற சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில், முதலீடு செய்வதற்கு உலகில் மிகச் சிறந்த நாடாக இந்தியா மாறியுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றன என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

- திருச்சி – பாங்காக் இடையேயான நேரடி விமான சேவை பிப்ரவரி மாத இறுதியுடன் ரத்து செய்யப்படுவதாக "தாய் ஏர் ஏசியா" நிறுவனம் தெரிவித்துள்ளது.

- முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த "ஈஐடி பாரி நிறுவனம்" "சிந்தைட் இண்டஸ்ட்ரீஸுடன்" இணைந்து ரூ.40 கோடி முதலீட்டில் புதிய ஆலையை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

- சிம்பனி நிறுவனத்தின் நிகர லாபம் 21 சதவீதம் அடைந்துள்ளது.

- ஸொமோடோவில் (உணவுகளை முன்பதிவு செய்யும் செயலி) ஆண்ட் ஸ்மால் அண்ட் மைக்ரோ பைனான்ஸியல் சர்வீசஸ் நிறுவனம் (அலிபாபா குழுமம்) 20 கோடி டாலர் முதலீடு செய்துள்ளது.

**பிப்ரவரி – 5**

- இந்தியாவில் அதிவேக டேட்டா சேவை வழங்கும் நிறுவனங்கள் பட்டியலில் ரிலையன்ஸ் ஜியோ முதலிடம் பிடித்திருக்கிறது.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மத்திய அரசின் ஜீரோ டிபெக்ட், ஜீரோ எபெக்ட் சான்றிதழ் திட்டத்தை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவின் முன்னணி இ-காமர்ஸ் நிறுவனமான பிளிப்கார்ட் ஆன்லைனில் மளிகைக் பொருள் விற்பனை செய்ய வால்மார்ட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

- இந்திய பங்கு சந்தையில் ரூ.22, 224 கோடி அந்நிய முதலீடு கிடைத்துள்ளது.

**பிப்ரவரி – 6**

- ஆன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசான் தற்போது யூபிஐ எனும் புதிய பேமன்ட் முறையை அறிமுகம் செய்துள்ளது.

- பார்தி டெலிகாம் நிறுவனத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த சிங்டெல் நிறுவனம் ரூ.2,649 கோடியை முதலீடு செய்துள்ளது.

- மென்பொருள் சேவை நிறுவனமான அக்சன்சர் இந்தியாவில் 50 நிறுவனங்களுடன் இணைந்துள்ளது.

## பிப்ரவரி – 7

- பொதுத்துறையை சேர்ந்த பஞ்சாப் நேஷனல் வங்கியின் வருவாய் 3வது காலாண்டில் ரூ.15,257.50 கோடியாக உள்ளது
- சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி 5 ஆண்டுகளுக்கான அமெரிக்க டாலர் வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை 3.56 சதவீதமாக மாற்றியுள்ளது
- முருகப்பா குழுமத்தின் செயல் தலைவராக எம்.எம். முருகப்பன் பொறுப்பேற்றுக் கொண்டார்
- டெல்லியில் இருந்து டெல் அவிவ் விமான நிலையத்திற்கு(இஸ்ரேல்) நேரடி விமான சேவை தொடங்க இஸ்ரேல் சுற்றுலா துறை அனுமதி அளித்துள்ளது

## பிப்ரவரி – 8

- நிதிக்கொள்கையில் வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி 6 சதவீதமாக நீடிக்கும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது
- சிட்டி யூனியன் வங்கியின் மூன்றாம் காலாண்டு நிகரலாபம் ரூ.439.87 கோடியாக அதிகரித்துள்ளது
- உலக அளவில் தங்க முதலீட்டுக்கான தேவை கடந்த ஆண்டில்(2017) வெகுவாக குறைந்துள்ளது என உலக தங்க கவுன்சில் தெரிவித்துள்ளது
- சர்க்கஸ், நடன, நாடக நிகழ்ச்சிகளில் நபருக்கு ரூ.500 வரையிலான நுழைவு கட்டணத்துக்கு ஜி.எஸ்.டி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது
- குறைந்த விலையில் வீடு வாங்குவோரிடம் ஜி.எஸ்.டி வரி வசூலிக்கப்பட மாட்டாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது
- அமெரிக்காவின் ஹார்லி டேவிட்சன் இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனம், பிரேக் பிரச்சனை காரணமாக உலகம் முழுவதும் இருந்து 2,51,000 பைக்குகளை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது

## பிப்ரவரி – 9

- நாடு முழுவதும் 2017ம் ஆண்டு ரூ.16,365.20 கோடி சுங்கக் கட்டணம் வசூலாகி உள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது

- மத்திய அரசின் பிரதம மந்திரி 'ஆவாஸ் யோஜனா' உள்ளிட்ட திட்டத்தின் கீழ் புதிதாக வீடு வாங்குபவர்களிடம் சரக்கு மற்றும் சேவை வரி வசூலிக்கக் கூடாது என்று ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது

- தென் கொரியாவில் நடக்க உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யும் உரிமையை ஜியோ நிறுவனம் பெற்றுள்ளது

- கூகுள் ஸர்ச் இன்ஜினில் பாரபட்சம் கடைப்பிடிக்கப்படுவதால் கூகுள் நிறுவனத்திற்கு இந்தியா போட்டி கண்காணிப்பு ஆணையம் ரூ.135.86 கோடி அபராதம் விதித்துள்ளது

- பி.எஸ்.என்.எல் நிறுவனம் கேரளாவில் முதல் முறையாக 4ஜி செல்போன் சேவையை தொடங்கியுள்ளது

- பொதுத் துறையைச் சேர்ந்த மின் உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனமான பி.ஹெச்.இ.எல்(பெல்) அதன் முதலீட்டாளர்களுக்கு 40 சதவீதம் இடைக்கால ஈவுத்தொகையை அறிவித்துள்ளது

**பிப்ரவரி – 10**

- அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும், 'பிளை – ஆஷ்' என்ற நிலக்கரி சாம்பல் தொடர்பான விவரங்களுக்கு வலைதளம் மற்றும் மொபைல் அப்பை (ASH TRACK) மத்திய மின் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் துவக்கி வைத்தார்

- கத்தார் நாட்டின் முன்னணி வங்கியான தோஹா வங்கியின் கிளை இன்று சென்னையில் திறக்கப்பட்டது

- செயலி மூலமான பணப் பரிவர்த்தனைக்கான பயிற்சி, விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக பேடிஎம் செயலி ரூ.500 கோடியை முதலீடு செய்ய உள்ளது

- நாட்டின் முக்கிய பொதுத்துறை வங்கியான பாரத் ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) டிசம்பர் காலாண்டு நிகர நஷ்டம் ரூ.18,876 கோடியாக அதிகரித்துள்ளது

**பிப்ரவரி – 11**

- இந்திய போஸ்ட் பேமன்ட்ஸ் வங்கி (இந்தியா) ஏப்ரல் மாதம் முதல் வாடிக்கையாளர்கள் வீட்டில் இருந்தே வங்கி சேவைகளை பெறுவதற்கான திட்டம் தயாரித்து வருகிறது.



We Shine Academy

- சொகுசு கார் நிறுவனங்களான போர்ஸெ (Porsche) மற்றும் ஆடி (AUDI) இணைந்து மின்சாரத்தால் இயங்கும் கார் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (ஹெச்பிசிஎல்) மூன்றாவது காலாண்டு லாபம் ரூ.1,950 ஆகும்.

- வாட்ஸ் அப் செயலியில் பணம் பரிமாற்றம் செய்வதற்கான சோதனை இந்தியாவில் செய்யப்பட்டு வருகிறது.

- ஏடிஎம் மையங்களில் ஆதார் பையோமெட்ரிக் விவரங்கள் மூலமாகச் சரிபார்த்துப் பணத்தினை விநியோகிக்கும் முறை சோதனை செய்யப்பட்டு வருகிறது.

- இந்தியாவின் ஓஎன்ஜிசிக்கும் ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த அபுதாபி நேஷனல் ஆ.்.ப்ஷோர் நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**பிப்ரவரி – 12**

- எஞ்சின் கோளாறு காரணமாக A320 ரக விமானங்களில் 3 விமானங்களின் சேவையை இண்டிகோ விமான நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது

- 2016-2017ம் நிதியாண்டில் பாரத் ஸ்டேட் வங்கியின் வாராக்கடன் மதிப்பு ரூ.20,339 கோடி ஆகும்.

- இந்தியாவில் குறைந்த வட்டி விகிதத்தில் வீட்டு கடன் அளிக்கும் வங்கிகள் பட்டியலில் எஸ்பிஐ முதலிடத்தில் உள்ளது. 8.30 சதவீதம் முதல் 5.60 சதவீதம் வரையிலான வட்டி விகிதத்தின் அடிப்படையில் வீட்டுக் கடனை அளிக்கின்றது

- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்(ஹெச்பிசிஎல்) 3வது காலாண்டில் ரூ.1,950 கோடி லாபம் ஈட்டியுள்ளது

- பணமதிப்பு நீக்கத்தின் போது திரும்பப்பெறப்பட்ட 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுகளை எண்ணும் பணி இன்னும் முழுமையடையவில்லை என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது

## பிப்ரவரி – 13

- இந்திய தொழிற்சாலை உற்பத்தி வளர்ச்சி 7.1 சதவீதமாகக் குறைந்துள்ளது
- நாட்டின் நுகர்வோர் பணவீக்க விகிதம் கடந்த ஜனவரி மாதம் 5.07 சதவீதமாகக் குறைந்துள்ளது
- இந்திய வங்கியின் நிகர வருவாய் 17.62 சதவீதம் வளர்ச்சி அடைந்து ரூ.2,171 கோடியை பெற்றுள்ளது
- அமெரிக்காவின் முன்னணி ஆன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசான் சில நூறு ஊழியர்களை ஆட்குறைப்பு செய்ய முடிவெடுத்துள்ளது
- பொதுத்துறை வங்கியான யுனைடெட் பேங்க் ஆப் இந்தியா டிசம்பர் காலாண்டின் நிகர நஷ்டம் ரூ.637 கோடியாக உள்ளது
- நாட்டின் மிகப் பெரிய பொதுத்துறை வங்கியான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கடந்த நிதி ஆண்டில் ரூ.20 ஆயிரத்து 339 கோடிக்கு வாராக் கடனை தள்ளுபடி செய்துள்ளது

## பிப்ரவரி – 14

- சிட்டி பேங்க், வங்கியின் கிரெடிட் கார்டு மற்றும் டெபிட் கார்ட் மூலம் பிட்காயினை வர்த்தகம் செய்ய தடை விதித்துள்ளது
- 20 ஆண்டுகளுக்கு பிறகு கோடிக் கணக்கில் நஷ்டம்(2017ம் ஆண்டு டிசம்பர் - ரூ.2416 கோடி) ஏற்பட்டுள்ளதாக ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அறிவித்துள்ளது
- வாராக்கடன் வசூலில் ரிசர்வ் வங்கி புதிய விதிமுறைகளை வகுத்து உள்ளது. கடனை திருப்பிச் செலுத்தவில்லை என்றால் 6 மாதத்தில் வங்கிகள் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு உள்ளது
- ஆந்திர மாநில அரசுடன், எமிரேட்ஸ் குழுமத்தைச் சேர்ந்த துணை நிறுவனமான பிளைதுபாய் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது
- அபுதாபியில் நேரடி முதலீட்டில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இந்திய நிறுவனங்கள் அபுதாபியில் 370 கோடி டாலரை முதலீடு செய்து 3 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது

- டியூட் இன்வெஸ்மென்ட் நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.33.89 கோடியாக உள்ளது

**பிப்ரவரி – 15**

- ‘மேக்னெட்டிக் மகாராஷ்டிரா’ என்ற பெயரில் சர்வதேச தொழில் முதலீட்டு மாநாடு பிப்ரவரி 18ம் தேதி மும்பையில் தொடங்கவுள்ளது
- அமெரிக்காவின் ‘எதிஸ்பியர் இன்ஸ்டியூட்’ கல்வி நிறுவனத்தின் நன்னெறி விருதினை ‘டாடா ஸ்டீல்’ நிறுவனம் 6வது முறையாக பெற்றுள்ளது
- 2017ம் ஆண்டில் உள்நாட்டு நிறுவனங்கள் இந்திய பங்குச் சந்தையில் ரூ.90,700 கோடியை முதலீடு செய்திருக்கின்றன என மார்னிங்ஸ்டார் நிறுவனம் தெரிவித்துள்ளது
- நிறுவனங்களிடமிருந்து திரட்டிய நிதியைக் கொண்டு டிஎல்எப் நிறுவனத்தின் கடன் ரூ.5,513 கோடியாக குறைந்துள்ளது
- 2017-2018ம் நிதியாண்டுக்கான இபிஎ∴ப் வட்டி விகிதம் 8.65 சதவிதமாக இருக்கும் என இபிஎ∴ப் ஆணையம் தெரிவித்துள்ளது
- இந்தியாவில், ஆன்லைன் மூலம் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்வது 14 சதவீதம் உயர்ந்துள்ளது

**பிப்ரவரி – 16**

- உலக பணக்காரர்கள் பட்டியலில் அமேசான் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ‘ஜெ∴ப் பெஸோஸ்’ முதலிடத்தில் உள்ளார்
- 7வது சம்பள கமிஷன் அமலாக்கத்தில் மத்திய அரசு பணிகளில் சேரும் துவக்க நிலை ஊழியர்களின் சம்பளம் ரூ.7000 இருந்து ரூ.18,000 மாக உயர உள்ளது
- என்எல்சி இந்தியா நிறுவனம் நிகழ் நிதியாண்டில் ரூ.957.78 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது
- முருகப்பா குழுமத்தின் கார்போரண்டம் யுனிவர்சல் மூன்றாம் காலாண்டு நிகர லாபம் 15 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது


We Shine Academy TM

## பிப்ரவரி – 17

- பங்கு வெளியீட்டில் தகுதி உள்ள சில்லரை முதலீட்டாளருக்கு பங்கு ஒதுக்கீடு செய்யாவிட்டால் தவறுக்கு காரணமான வணிக வங்கி இழப்பீடு வழங்க வேண்டும் என்று செபி உத்தரவிட்டுள்ளது

- எக்கி பம்ப் நிறுவனம் ஜெர்மனியைச் சேர்ந்த ஹோமா நிறுவனத்துடன் கூட்டு வர்த்தக ஒப்பந்தம் செய்துள்ளது

- உள்நாட்டில் புதிய விமான நிலையத்தை கட்டமைக்கவும், விரிவாக்கத் திட்டங்களை மேற்கொள்ளவும் வரும் நிதி ஆண்டில் ரூ.15000 கோடியை முதலீடு செய்யவுள்ளதாக ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆ.்.ப் இந்தியா(ஏஏஐ) தெரிவித்துள்ளது

- ஆயுள் காப்பீட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் எல்ஐசி நிறுவனத்தின் பிரீமியம் வருவாய் 11.47 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது

- நாட்டில் 5ஜி தொழில்நுட்பத்தில் தாலை தொடர்பு சேவை தொடர்பான விதிமுறைகள் ஜுன் மாதத்திற்குள் வெளியாகும் என தொலை தொடர்பு துறை செயலர் அருணா சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்

## பிப்ரவரி – 18

- உலகில் அதிக மதிப்புள்ள நிறுவனங்கள் பட்டியலில் அமேசான் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது

- மத்திய கனரக தொழில்துறை, தேசிய வாகன கொள்கைளின் வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது

- இந்திய நிறுவனங்கள் ஜனவரி மாதத்தில் ரூ.97,500 கோடி மதிப்புக்கு இணைத்தல் மற்றும் கையகப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன

- இந்தியாவின் முன்னணி இ-காமர்ஸ் நிறுவனமான பிளிப்கார்ட் நிறுவனத்தின் 40 சதவீத பங்குகளை வாங்க அமெரிக்காவை சேர்ந்த வால்மார்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது

- உணவுப் பொருட்கள் விலை குறைவால், நாட்டின் மொத்த விலை பணவீக்கம், இந்தாண்டு ஜனவரியில் 2.84 சதவீதமாக சரிவடைந்துள்ளது

- நெஸ்லே இந்தியா நிறுவனம் அக்டோபர் - டிசம்பர் காலாண்டில் ரூ.311.83 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது

## பிப்ரவரி – 19

- 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை வங்கி அதிகாரிகளை கட்டாய பணியிடை மாற்றம் செய்ய வேண்டும் என ஊழல் தடுப்பு ஆணையம் உத்தரவிட்டுள்ளது

- பிரான்ஸ் அரசின் கொள்கைகளை அமல்படுத்தும் பிரான்ஸ் வளர்ச்சி வங்கியான ஏ.எஃப்டி இந்தியாவில் செயல்படுத்தப்படவுள்ள 'பொலிவுறு நகரங்கள்' திட்டத்தில் ரூ.800 கோடி முதலீடு செய்ய தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது

- கூகுள் நிறுவனம், இமேஜஸ் சேவையில் இருந்து View image ஆப்ஷனை நீக்கியுள்ளது

- 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் இந்தியாவில் பேட்டரி பஸ்களை தயாரிப்பதற்கு கோல்டு ஸ்டோன்(ஹைதராபாத்) குழுத்துடன் பிஒய்டி நிறுவனம்(சீனா) இணைந்துள்ளது

- இந்தியாவின் மிகப்பெரிய ஆட்டோமொபைல் நிறுவனமான மஹிந்திரா, வாடகை கார் சேவை வழங்கும் 'ஜூம்கார்' நிறுவனத்தின் 'இந்திய கிளை' மற்றும் 'அமெரிக்க கிளையில்' முதலீடு செய்துள்ளது

## பிப்ரவரி – 20

- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனம், சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து மகாராஷ்டிராவில் 'ஒருங்கிணைந்த டிஜிட்டல் தொழில் நகரம்' ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது

- கடந்த 11 ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகளுக்கு மத்திய அரசு ரூ.2.6 லட்சம் கோடி நிதி அளித்துள்ளது

- இந்தியாவில் மின்சாரத்தில் இயக்கும் வாகனங்கள் தயாரிப்புக்காக ரூ.900 கோடியை கூடுதலாக முதலீடு செய்ய மஹிந்திரா குழுமம் முடிவு செய்துள்ளது

- இணையதளங்கள் வைத்திருப்பவர்கள் தங்கள் தளத்தில் விளம்பரம் வைத்து கொள்ள கூகுள் நிறுவனம் ஆட்சென்ஸ் என்னும் இலவச சேவையை வழங்கி வருகிறது. இந்த சேவையை தமிழ் மொழியில் பயன்படுத்தும் புதிய வழிமுறையை கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது

## பிப்ரவரி – 21

- கனடாவின் பேர்பேக்ஸ் நிறுவனம், கேரளாவில் உள்ள கத்தோலிக் சிரியன் வங்கியின் 51 சதவீதத்தை வாங்க முடிவு செய்துள்ளது. இந்தியாவில் 51 சதவீதம் பங்குகளை வாங்கும் முதல் வெளிநாட்டு நிறுவனம் இதுவாகும்.

- பன்னாட்டு வர்த்தக ரேட்டிங் அமைப்பான மூடிஸ், பஞ்சாப் நேஷனல் வங்கியின் மதிப்பீட்டு தரக்குறியீட்டை குறைத்துள்ளது. வங்கியின் வெளிநாட்டு பண வெளியீட்டு மதிப்பு திறன் Baa3 எனவும், ஒட்டுமொத்த மதிப்பீடு Baa2 எனவும் குறைக்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டில், நிலக்கரியை வெட்டி எடுத்து வர்த்தகரீயாக விற்பனை செய்ய தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- கனடாவில் ரூ.6,488 கோடி அளவுக்கு முதலீடு செய்ய இந்திய தொழில் நிறுவனங்கள் ஒப்புதல் அளித்துள்ளது.

- நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான கால அளவில் கச்சா வைரம் இறக்குமதி 11.11 சதவீதம் அதிகரித்துள்ளது என நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் தெரிவித்துள்ளது.

## பிப்ரவரி – 22

- 2018 ஆம் ஆண்டுக்கான உலகின் 50 புதுமையான நிறுவனங்களின் வருடாந்திர தரவரிசையில் ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் நிறுவனம் 17வது இடத்தைப் பிடித்துள்ளது.

- அமேசான் ஆன்லைன் வீட்டு உபயோக பொருள் விற்பனையில், அகில இந்திய அளவில் தமிழகம் 4வது இடத்தை பிடித்துள்ளது.

- நாட்டில் உள்ள தொழில் முனைவோருக்கு வர்த்தகத்தில் உதவி செய்ய மத்திய அரசின் நிதி ஆயோக்கில் பிரத்யேக பிரிவு தொடங்க உள்ளது.

- ஜப்பான் தயாரிப்பான தோஷிபா நிறுவனம் தற்போது இந்திய சந்தைகளில் ஆடியோ சாதனங்கள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

## பிப்ரவரி – 23

- நாட்டில் உள்ள தொழில்முனைவோரை ஒருங்கிணைத்து அவர்களது வாத்தகத்திற்கு உதவி செய்ய மத்திய அரசின் நிதி ஆயோக்கில் பிரத்யேக பிரிவு தொடங்கப்பட்டுள்ளது

- சினிமா உலகில் சிறந்து விளங்கும் அதி நவீன தொழில்நுட்பமான 'ஐ-மேக் ப்ரோ கணினி'(ஆப்பிள் நிறுவனம்) இந்திய சந்தைக்கு ரூ.4,15,000 விலைக்கு வந்துள்ளது

- பொதுத் துறையைச் சேர்ந்த பாரத் டைனமிக்ஸ் மற்றும் இந்தியன் ரினீவபிள் எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜென்சி(ஐ.ஆர்.இ.டி.ஏ) ஆகிய நிறுவனங்களின் பொது பங்கு வெளியிட்டுக்கு செபி அனுமதி வழங்கியுள்ளது

- வருங்கால வைப்பு நிதி மீதான வட்டி விகிதம்(ஈபிஎ.ஃப்) 8.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது

- இன்வெஸ்ட்மெண்ட் பேங்கிங் பிரிவில் செயல்பட்டு வரும் எக்யுரஸ் கேபிடல் நிறுவனத்தின் 26 சதவீத பங்குகளை பெடரல் வங்கி வாங்கியுள்ளது

- இந்தியாவில் தொடர்ந்து முதலீடு செய்வோம் என உபெர் தலைமைச் செயல் அதிகாரி 'தாரா கோஸ்ரோஷகி' தெரிவித்துள்ளார்

## பிப்ரவரி – 24

- கழிப்பறை கட்ட புதிய கடன் திட்டத்தை(ஐஓபி ஸ்வச்தா) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் படி தனிநபர் அல்லது சுய உதவி குழுக்கள் கழிப்பறைகள் கட்ட அல்லது புதுப்பிக்க ரூ.20,000 வரை கடன் பெறலாம்

- இந்தியாவில் நடப்பு நிதியாண்டில் அந்நிய முதலீடு 3,594 கோடி டாலராக உள்ளது

- 'தி ஸ்டேட் ஆப் எல்டிஇ' என்ற மொபைல் போன் ஆய்வு நிறுவனம் 88 நாடுகளில் 4ஜி அலைவரிசை வேகத்தை அளவிட்டுள்ளது. இதில் கஜகஸ்தான், பாகிஸ்தான், சவுதி அரேபியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளை விட இந்தியாவில் 4ஜி அலைவரிசை வேகம் குறைந்துள்ளது

## பிப்ரவரி – 25

- வங்கிகளை தனியார் மயமாக்கும் திட்டம் இல்லை என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

- சரக்கு போக்குவரத்துக்கான 'இ-வே' ரசீது எனப்படும், மின் வழிச் சீட்டு ஏப்ரல் 1 முதல் மீண்டும் அறிமுகமாக உள்ளது.

- இந்திய நிறுவனங்கள் வெளிநாட்டில் மேற்கொள்ளும் முதலீடு கடந்த ஜனவரி மாதத்தில் 70 சதவீதம் சரிவடைந்துள்ளதாக ரிசர்வ் வங்கி புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளது.

- ஏர் ஆசியா நிறுவனம் பெங்களூர் - சென்னை வழித்தடத்தில் மீண்டும் விமான சேவையை தொடங்கியுள்ளது.

## பிப்ரவரி – 26

- வெளிநாட்டு ஊழியர்களுக்கு அதிக சம்பளம் அளிப்பதில் சர்வதேச அளவில் 'மும்பை' முதலிடம் பிடித்துள்ளது

- தொலைத் தொடர்பு துறையில் 5ம் தலைமுறை(5ஜி) சேவைகளை வழங்க தயாராகும் வகையில், அமெரிக்காவின் இன்டெல் நிறுவனத்துடன் இணைந்து, டெக் மகேந்திர நிறுவனம் பெங்களூருவில் ஆய்வு மையம் ஒன்றை அமைத்துள்ளது

- இந்தியாவின் முன்னணி வங்கியான ஸ்டேட் பேங் ஆப் இந்தியா (SBI) ஏப்ரல் மாதம் UKவில் உள்ள தங்களது வர்த்தகத்தினை மறுசீரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளது

## பிப்ரவரி – 27

- சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பீங்கான் பொருள்களுக்கு மத்திய அரசு பொருள்குவிப்பு வரியை விதித்துள்ளது.

- பிரிட்டனை சேர்ந்த ஈஐயூ அமைப்பு இணைய சேவை பற்றிய ஆய்வை மேற்கொண்டது. இதில் இந்தியா 47வது(86 நாடுகளில்) இடத்தில் உள்ளது. ஆசிய அளவில் இந்தியா 12வது(23 நாடுகளில்) இடத்தில் உள்ளது.

- பொதுத் துறையைச் சேர்ந்த பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன்(பிஎஃப்சி) நடப்பு நிதி ஆண்டுக்கான இரண்டாம் கட்ட இடைக்கால ஈவுத்தொகை வழங்க, அதன் நிர்வாக குழு ஒப்புதல் அளித்துள்ளது.



We Shine Academy

- விமான பயணியருக்கு, மொபைல்போனில் அதி விரைவான டேட்டா இணைப்பு வசதி அளிக்க, சர்வதேச குழுமமான ‘சீம்லெஸ் அலையன்ஸ்’ உடன் ‘பார்தி ஏர்டெல்’ இணைந்துள்ளது.

- மூலதன சந்தையில், பங்கேற்பு ஆவணங்கள் மூலம் ரூ.1.19 லட்சம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**பிப்ரவரி – 28**

- 2018 சர்வதேச மொபைல் விருதுகள் பட்டியலில் ‘சிறந்த நுகர்வோர் சேவையை வழங்கும் மொபைல் ஆப்ரேட்டருக்கான விருது’ ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது

- மத்திய அரசின் சரக்கு மற்றும் சேவை வரி(ஜிஎஸ்டி) வசூல் சென்ற மாதம் (ஜனவரி) ரூ.86,318 கோடியாக குறைந்துள்ளது

- பிஎ.ஃ.ப் பணம் ரூ.10 லட்சத்துக்கு மேல் எடுக்க ஆன்லைனில் மட்டுமே விண்ணிபிக்க வேண்டும் என பிஎ.ஃ.ப் நிறுவனம் தெரிவித்துள்ளது

- பிரதமர் மோடி பதவி ஏற்றதில் இருந்து இந்திய பங்குச்சந்தைகள் ஆண்டுக்கு 13 சதவீதம் அளவுக்கு உயர்ந்திருப்பதாக மத்திய வர்த்தக அமைச்சர் சுரேஷ் பிரபு தெரிவித்துள்ளார்

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**பிப்ரவரி – 2**

- உடலில் காதின் வெளிப்புற பகுதி வளர்ச்சி அடையாமல் இருப்பவர்களுக்கு அவர்களின் உடலில் உள்ள குருத்தெலும்பு செல்களில் இருந்து புதிய காதுகள் உருவாக்கி உயிரியல் விஞ்ஞானிகள் சாதனைப் படைத்துள்ளனர்

- உணவகங்களில் துரித உணவாக இருக்கும் ‘சாண்ட்விச்’, புவி வெப்பமயமாதலில் கணிசமான பங்கு வகிப்பதாக மான்செஸ்டர் பல்கலைக்கழக(பிரிட்டன்) விஞ்ஞானிகள் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளனர்

- ஆஸ்திரேலிய நிறுவனம், சிறிய தோட்டத்தை நடவு முதல் அறுவடை செய்து பராமரிக்கக் கூடிய ஒரு ரோபோவை ‘கார்டன் ஸ்பேஸ்’ கண்டுபிடித்துள்ளது

**பிப்ரவரி – 6**

- அமெரிக்காவைச் சேர்ந்த "ஹார்லி டேவிட்சன்" ஆட்டோமொபைல் நிறுவனம் பேட்டரியால் இயங்கக்கூடிய மோட்டார் சைக்கிளை தயாரித்து வருகிறது.

- ஒகலாமா பல்கலைக்கழக (அமெரிக்கா) ஆராய்ச்சியாளரான "ஜின்யு டாய்", "எடுவர்டு கொர்ராஸ்" ஆகியோர் மைக்ரோலென்சிங் நுண் தொழில்நுட்பம் மூலம் பால்வெளி வீதிக்கு அப்பால் புதிய கிரகங்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.

**பிப்ரவரி – 7**

- பால்வெளி அண்டத்தில் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட 7 கோள்களில் தண்ணீர் மற்றும் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் உள்ளது என்று பிர்மிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்

**பிப்ரவரி – 8**

- அணுகுண்டுகளை சுமந்துச் சென்று தாக்குதல் நடத்தும் வல்லமையுடைய பிருத்வி – 2 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.

**பிப்ரவரி – 9**

- '2018 சிபி' என்ற விண்கல் இன்று பூமிக்கும், நிலவுக்கும் இடையே கடக்கவுள்ளது என நாசா அறிவித்துள்ளது

**பிப்ரவரி – 12**

- சூரியனின் வெப்பக்கதிர்வீசல் 2050ம் ஆண்டுக்குள் குறைந்தபட்ச அளவுக்கு செல்லும் என்று அறிவியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்

**பிப்ரவரி – 14**

- அமெரிக்காவை சேர்ந்த பாஸ்டன் டைனமிக் என்ற நிறுவனம் நான்கு கால்களை கொண்ட புதிய ரோபோக்களை(வீட்டு பயன்பாட்டுக்கு உபயோகப்படும்) உருவாக்கியுள்ளது

We Shine Academy

- கேன்சர் கட்டிகளுக்கு செல்லும் ரத்தத்தை தடுத்து கேன்சர் செல்களை அழிக்கும் புதிய சிகிச்சை முறையை கண்டுபிடித்து அமெரிக்க விஞ்ஞானிகள் (அரிசோனா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்) சாதனைப் படைத்துள்ளனர்

**பிப்ரவரி – 20**

- சத்தீஸ்கரில் புற்று நோயை எதிர்க்கும் ஆற்றல் கொண்ட 3 அரிசி வகைகளை(கத்வான், மகராஜி, லைசா) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்

- அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன் கொண்ட நடுத்தர ரக அக்னி 2 ஏவுகணை சோதனை வெற்றியில் முடிந்தது

**பிப்ரவரி – 22**

- அதிவேக இண்டர்நெட் வசதிக்காக ‘ஜி சாட் - 11’ செயற்கைகோள் விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

- அணு ஆயுதத்தை சுமந்து சென்று தாக்கும் பிருத்வி 2 ஏவுகணை சோதனை வெற்றியடைந்துள்ளது.

**பிப்ரவரி – 23**

- இரும்பு உருக்கை விட அதிக உறுதி கொண்ட அலுமினிய அலோகத்தை அமெரிக்க மற்றும் சீன விஞ்ஞானிகள் இணைந்து உருவாக்கியுள்ளனர். இந்த அலோகத்திற்கு ‘அட்வான்ஸ்டு மெட்டீரியல்ஸ்’ என்று பெயரிடப்பட்டுள்ளது

- ஜெர்மனியை சேர்ந்த பிரான்ஹோபர் என்ற நிறுவனம் விவசாயத் துறைக்கு உதவக்கூடிய ‘கேட்ச்’ என்ற வெள்ளரிக்காய் பறிக்கும் ரோபோவை வடிவமைத்துள்ளது

- உத்தரக்காண்டை சேர்ந்த ‘பிரகாஷ் சந்திரா உபாத்யே’ என்பவர் உலகிலேயே ‘மிகச் சிறிய பென்சிலை’(5மி.மீ நீளம் 0.5மி.மீ அகலம்) உருவாக்கி சாதனைப் படைத்துள்ளார்

**பிப்ரவரி – 24**

- இந்திய இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு வடிவமைத்த ‘தனுஷ்’ ஏவுகணை சோதனை வெற்றி பெற்றது

## பிப்ரவரி – 26

- ஹைதராபாத்தைச் சேர்ந்த ‘கஸ்தூப் கவுண்டியா, ஸ்ரீகாந்த் கோம்முலா, ஆனந்த் குமார்’ ஆகிய 3 இளைஞர்களும் சேர்ந்து பைக் ஓட்டுபவர்களுக்கென ஏசி பொறுத்தப்பட்ட தலைகவசத்தை தயாரித்துள்ளனர்

- இந்திய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானமான ‘ருஸ்டம் - 2’ சோதனை வெற்றியில் முடிந்தது.

- பிரான்ஸ் நாட்டை சேர்ந்த அர்சோஸ் நிறுவனம் முதன் முறையாக ‘அன்ராயிட் இயக்குதளத்தின்’ உதவியுடன் கட்டுப்படுத்தக்கூடிய ‘ஸ்கூட்டரை’ அறிமுகம் செய்துள்ளது

## பிப்ரவரி – 27

- நிலவில் மனிதர்கள் தங்கி ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில், குகை போன்ற அமைப்பை உருவாக்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

- வியாழன் கிரகத்தின் துணை கிரகமான ‘யூரோப்பா’ முழுவதும் ஐஸ்கட்டியால் ஆனது. இங்கு உயிரினங்கள் வாழ முடியும் என்று பிரேசில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

- கரப்பூர் ஐஐடி மாணவி ‘ரம்யா’, சாக்கடையில் உள்ள பாக்டீரியா மூலம் செயல்படும் பேட்டரியை கண்டுபிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

## பிப்ரவரி – 28

- நிலவின் சுற்று பாதையில் உள்ள நாசாவின் விண்கலமான ‘எல்ஆர்ஓ மற்றும் சந்திரன்-2’ விண்கலத்தில் இடம்பெற்ற ‘மூன் மினராலஜி மேப்பர்’ என்ற கருவி மூலம், நிலவின் அனைத்து பகுதியிலும் கனிம வளங்கள் மற்றும் நீர் செரிந்துள்ளதை நாசா கண்டுபிடித்துள்ளது

- விண்வெளி வீரர்களுக்கு என்று உயிர்காக்கும் கருவி மற்றும் கழிவறை வசதி கொண்ட புதிய ஆடையை நாசா தயாரித்துள்ளது


We Shine Academy TM

# புதிய நியமனம்

**பிப்ரவரி – 2**

- தேசிய பாதுகாப்பு படை(என்.எஸ்.ஜி) இயக்குனர் ஜெனரலாக ‘சுதீப் லக்தாகியா’ பொறுபேற்றார்

- தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநராக ‘எட்வின்ஜோ’ நியமனம் செய்யப்பட்டுள்ளார்

**பிப்ரவரி – 6**

- முருகப்பா குழுமத்தின் (சென்னை) புதிய செயல் தலைவராக எம்.எம்.முருகப்பன் பொறுப்பேற்றுள்ளார்.

**பிப்ரவரி – 7**

- கேரள உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அந்தோணி டொமினிக் நியமிக்கப்பட்டுள்ளார்

- திரிபுரா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அஜய் ரஸ்டோகி நியமிக்கப்பட்டுள்ளார்

- மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக அபிலாஷா குமாரி நியமிக்கப்பட்டுள்ளார்

**பிப்ரவரி – 11**

- ஐ.நா சார்பில் சூடான் நாட்டுக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படை குழுவின் தலைவராக முதல் முறையாக பிரிட்டனை சேர்ந்த பெண் லெப்டினன்ட் கர்னலான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார்.

**பிப்ரவரி – 12**

- கொழும்பு (இலங்கை) மாநகராட்சி தொடங்கி 152 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் முதல் முறையாக பெண் மேயராக முன்னாள் உலக அழகியான ரோசி சேனாநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

- பிரான்சு - இந்தியா சங்கங்களின் கூட்டமைப்பு தலைவராக பா.தசரதன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**பிப்ரவரி – 13**

- நாகலாந்து சட்டப் பேரவை தேர்தலில் ‘நேய்பியூ ரியோ’(அம்மாநில முன்னாள் முதல்வர்) போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்
- காஷ்மீரின், போலீஸ் ஐ.ஜி-யாக ‘ஸ்வயம் பிரகாஷ்’ பதவியேற்றார்
- கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக தினேஷ் மகேஷ்வரி பதவியேற்றார்

**பிப்ரவரி – 24**

- தமிழகத்தின் புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக ‘சத்யபிரதா சாஹு’ நியமிக்கப்பட்டுள்ளார்

## ஒப்பந்தம்

**பிப்ரவரி – 11**

- இந்தியா - அபுதாபி இடையே ரயில்வே, மின்சாரம், நிதி சேவை உள்ளிட்ட 5 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.
- இந்தியா - பாலஸ்தீனம் இடையே 5 கோடி டாலர் மதிப்பீட்டில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

## முக்கிய தினங்கள்:

**பிப்ரவரி – 1**

- பிப்ரவரி 01 – நாசா மூலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட கல்பனா சாவ்லா நினைவு நாள்(252 முறை பூமியை வலம் வந்த இந்தியப் பெண்)

**பிப்ரவரி – 3**

- பிப்ரவரி 02 – உலக சதுப்பு நில தினம்

**பிப்ரவரி – 4**

- பிப்ரவரி 04 – உலக புற்றுநோய் தினம்

**பிப்ரவரி – 14**

- பிப்ரவரி 13 – சரோஜினி நாயுடு(இந்தியாவின் நைட்டிங்கேல்) பிறந்த நாள்

**பிப்ரவரி – 20**

- பிப்ரவரி 19 – மராத்திய பேரரசை உருவாக்கிய ‘சத்ரபதி சிவாஜி’ பிறந்த தினம்
- பிப்ரவரி 20 – உலக சமூக நீதி தினம்

**பிப்ரவரி – 21**

- பிப்ரவரி 21 – உலக தாய்மொழி தினம்.

**பிப்ரவரி – 28**

- பிப்ரவரி 28 – தேசிய அறிவியல் தினம்

# விருதுகள்

**பிப்ரவரி – 9**

- கட்டுரைப் போட்டிக்காக பிரிட்டன் பாத் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ‘இளைய இந்தியா மாணவர் விருதினை(2018)’ வசந்த் வேலி பள்ளியைச்(டெல்லி) சேர்ந்த மாணவன் ‘நமித் மேகிஜா’ வென்றுள்ளார்

**பிப்ரவரி – 11**

- இந்தியா-பாலஸ்தீனம் இடையே நல்லுறவை மேம்படுத்தியதற்காக பிரதமர் மோடிக்கு பாலஸ்தீனத்தின் உயரிய விருதான ‘கிரேட் காலர் ஆப் பாலஸ்தீனம்’ வருது வழங்கப்பட்டுள்ளது.

**பிப்ரவரி – 13**

- இங்கிலாந்தின் ‘அமைதிக்கான தூதவர் விருது’ தமிழகத்தை சேர்ந்த ‘அப்துல் பாசித்க்கு’ வழங்கப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 14**

- உலக தொல்காப்பிய மன்றச் செயலாளர் மு. இளங்கோவனுக்கு ‘தொல்காப்பிய காவலர் விருது’ வழங்கப்பட்டுள்ளது

**பிப்ரவரி – 27**

- 3வது ஸ்கார்பியோ ‘டைம்ஸ் ஆ∴ப் இந்தியா’ விளையாட்டு விருதுகள் (டாய்ஸா) வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருது இந்திய கிரிக்கெட் அணியின் ‘பும்ராவுக்கு’ வழங்கப்பட்டுள்ளது.

# முக்கிய பிரமுகர்களின் பயணம்

**பிப்ரவரி – 12**

- ஐக்கிய அரபு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி அபுதாபி சுற்றுப்பயணம் முடித்து ஓமன் சென்றுள்ளார்.

- மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள மோடி ஓமன் நாட்டின் துணை பிரதமர் சய்யித் ∴பஹத் பின் மஹ்மூத் அல்-சைத்தை சந்தித்துள்ளார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com

# இறப்பு செய்தி

**பிப்ரவரி – 12**

- பாகிஸ்தானை சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் ஆஸ்மா ஜகாங்கிர் காலமானார்

**பிப்ரவரி – 14**

- பத்மஸ்ரீ விருது வென்ற முன்னணி பத்திரிக்கையாளரான ‘முசாபர் ஹுசைன்’ காலமானார்

**பிப்ரவரி – 24**

- நேஷனல் ஹெரால்ட் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக பணியாற்றும் ‘நீலப் மிஸ்ரா’ காலமானார்

**பிப்ரவரி – 26**

- மத்திய மந்திரிசபை முன்னாள் செயலர் ‘டி.எஸ்.ஆர். சுப்பிரமணியம்’(தமிழகம்) இன்று காலமானார்

- தூய்மையான இந்தியா திட்டத்தின் தூதுவராக களப்பணி ஆற்றிய ‘குன்வர் பாய்’(மூதாட்டி) காலமானார்

- நடிகை ‘ஸ்ரீதேவி’ பிப்ரவரி 24ம் தேதி காலமானார்

We Shine Academy™